ஓம்சிவம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௮	மெய்கண்டான்யாண்டு-௭௱௭ வைகாசித் திங்கள் 1930௵ மே௴—ஜூன்௴	பரல் ௫

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

தனித்திருநேரிசை

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச் [சித்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே.

இது மிக்க பொருட் செறிவுள்ள ஒரு அருமையான தேவாரப்பா. இதற்கு நீண்ட பொழிப்புரை செய்தல் அதில் அடங்கியுள்ள கருத்துக்களை நன்கு விளக்காது. இதிலுள்ள உபமான உபமேயப் பொருள்களை விரித்துக் கூறுதலால் இப்பாட்டின் பொருள் நன்கு விளங்கும்.

2. *இந்தப்பா ஒருவன் பேரின்பம் அடைதற்கு எவ்வாறு முயற்சி செய்தல் வேண்டும் என்பதைக் கூறுகின்றது. இறைவனது அருளைப் பெற விரும்பும் ஒருவன் செய்யும் முயற்சியானது பயிர் செய்யும் ஒரு உழவனது முயற்சிக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. உழவன் பயிர் செய்கிற இடம் நிலம் ஆகும். பேரின்ப விருப்பன் பயிர் செய்கிற இடம் உயிர் அறிவு ஆகும். உழவன் தனது நிலத்தை முதலாவது உழுகின்றான்; பேரின்ப விருப்பன் தனது உயிர் அறிவில் தனது ஆசிரிய*

னிடம் கடவுளைப்பற்றிக் கேட்ட உண்மைகளைச் சிந்தனைசெய்து பயில்கின்றான். உழவு செய்யச்செய்ய நிலம் பண்படுதல் போல உண்மைகளை உயிரறிவிலே சிந்தனை செய்யச்செய்யப் பேரின்ப விருப்பனுடைய உயிர் பண்படுகின்றது. நிலத்தை உழுத பின் உழவன் அதில் தான் பெற விரும்புகிற தானிய விதைகளை விதைக்கின்றான்; பேரின்ப விருப்பன் கடவுளைப்பற்றி ஆசிரியன் மொழிந்த உண்மைகளை அறிந்த பின் அவைகளை யுணர்ந்து கடவுளிடத்தில் அன்பு செய்கின்றான். உழவன் தான் விதைத்து உண்டாக்கின பயிர்களினிடையில் முளைத்த களையைப் பிடுங்கி எறிந்து பயிர் ஓங்கிவளரும்படி செய்கின்றான். பேரின்ப விருப்பன் தனது உயிரறிவில் சிந்தித்துப் பயின்ற உண்மைகளைப் பற்றி உண்டாகும் ஐயந்திரிபுகளை நீக்கி அவ்வுண்மைகள் உறுதியாய் நிலை நிற்கும்படி செய்கின்றான். மெய்மை என்பது இங்கே கடவுளைப் பற்றிய உண்மைகளை ஐயந்திரிபற அறிந்து கடவுளைச் சார்ந்து நிற்கிறமெய்த்தன்மை. (சத்துத்தன்மை - Reality). பொய்மை என்பது அவ்வுண்மைகளுக்கு மாறான கருத்துக்களினால் உலக வாழ்வில் பற்றுவைத்து அதனை மெய்யென்று கருதும் பொய்த்தன்மை. (அசத்துத்தன்மை - Unreality). உழவனுடைய நிலத்தில் முளைத்த பயிர் தண்ணீரில்லாமல் வாடினபொழுது அவன் அதற்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றான்; பேரின்ப விருப்பன் ஆசிரியனிடத்திற் கேட்டுச் சிந்தித்து அறிந்த உண்மைகளின் வழியாக உண்டான கடவுளைப்பற்றிய அன்பானது தான் முன் செய்த வினைப்பயனால் நுகரும் துன்பங்களை நினைத்தலினால் சோர்வு அடையும். அப்பொழுது அவைகளைத் தான் முன் செய்த வினைப்பயன் என்றெண்ணிப் பொறுமையுடன் பொறுத்துக் கொள்ளுதலினால் அன்பு சோர்வு அடையாமல் உறுதிப்படுகின்றது. பயிர் செழிப்பாய் ஓங்கி வளர்ந்து அதில் கதிர்கள் தோன்றுகின்றன. பயிர் வளர்ந்து அப்படிக்கதிர்கள் தோன்றினமையை உழவன் உற்று நோக்கித் தான் செய்த முயற்சிக்கும் பயிரின் பலனுக்கும் கடவுளுடைய அருளே காரணமாயிருக்கிறது என்று அறிந்து உணர்கிறான். பேரின்பவிருப்பன் தனது உயிரறிவில் கடவுளைப்பற்றிய அறிவும் அன்பும் உறுதியாய் நின்று தூய்மையும் அடைதலால் பயிரிலிருந்து தானியக்கதிர் உண்டானது போல உள்ளுணர்வு ஆகிய அருளறிவு உண்டாகின்றது. இந்த அருளறிவினால் பேரின்ப விருப்பன் தன்னறிவினுள்ளே கடவுள் இரண்டறக் (அத்துவிதமாய்க்) கலந்து ஒன்றித்து நின்று தான் பேரின்பம் அடைதலுக்கு வேண்டுவனவாகிய காணும் உபகாரம் காட்டும் உபகாரங்களை எப்பொழுதும் விகாரமின்றிச் செய்து கொண்டு வருகிறான் என்னும்

உண்மையை அறிகின்றான். இந்த உண்மையைப் பேரின்ப விருப்பன் தன் அறிவினுள்ளே அறிந்து கடவுளுடன் ஏகமாய் நிற்றலே தன்னை நோக்கிக் காணுதல் ஆகும். கதிர்கள் தோன்றின பயிரை விலங்குகள் முதலானவைகள் சேதப்படுத்தாமல் உழவன் நிலத்துக்கு வேலியிடுகின்றான். பேரின்ப விருப்பன் தான் அடைந்த அருளறிவு நிலை மலத்தினாலுண்டாகிய பழைய வாசனையால் தாக்கப்பட்டு நழுவாமலிருக்கும்படி தான் சேடியனாகிய கடவுளுக்குச் சேடப்பொருள் (ஆண்டானாகிய கடவுளைப் பிரிந்து தனித்து நில்லாத அடிமைப்பொருள்) என்னும் பெருந்தகைமையை நினைந்து சிவோகம் பாவனையும் அஞ்செழுத்து ஓதலும் செய்கின்றான். 'தகவு எனும் வேலி' என்பது சிவோகம் பாவனையும் அஞ்செழுத்தோதலும் செய்தல். உழவன் மேலே கூறியபடி செய்தால் விதைத்து வளர்ந்த பயிரில் தானியப் பலன் விளைகின்றது. பேரின்ப விருப்பன் முன்னே தன் அறிவானது திருகி ஐம்புலன் வழியே சென்று உலக விடயங்களை நுகர்ந்து கொண்டிருந்த விலக்கு நெறியினின்று திரும்பிக் கடவுளை நோக்கி நேர்மையாய் மேலே கூறிய வண்ணம் ஒழுகுதலாகிய செந்நெறியில் ஒழுகுதலினால் அவனுக்குச் சிவனது திருவடியை அடைதலாகிய வீட்டின்பம் விளைகின்றது; அவன் பேரின்பம் அடைகின்றான். செம்மை என்பது கடவுளை நேராய் நோக்கி ஒழுகும் வீட்டு நெறி. சிவகதி என்பது சிவனையடைதலாகிய வீட்டின்பம்.

3. இந்தத் தேவாரம் வீட்டு நெறியைக் கூறுதலால் இதனை வீட்டு நெறித் தேவாரப்பா என்று நாம் கூறலாம். இந்தப்பாட்டு சிவஞான போதம் அ-வது சூத்திரத்தில் "தம் முதல் குருவு மாய்த்தவத்தினி லுணர்த்த" என்னும் பேரின்ப விருப்பனுடைய நிலை முதல் "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்னும் கக-வது சூத்திரத்திற் கூறப்பட்ட வீட்டு நிலை வரை கூறுகின்றது. 'மெய்ம்மையாம் உழவைச் செய்தல்' என்பது ஆசிரியனுடைய உபதேச உண்மைகளை "ஞானக்கண்ணினிற்சிந்தை நாடி" என்னும் கூ-வது சூத்திரத்திற் கூறப்பட்ட நிலை. 'பொய்ம்மையாங் களையை வாங்குத'லாவது கூ-வது சூத்திரத்திற் கூறப்பட்ட, "பாசம் ஒருவுதல்" அதாவது பொய்த்தன்மையை (அசத்துத்தன்மையை) நீக்குதல், பொருட்பற்றும் உயிர்ப்பற்றும் விட்டுக் கடவுளைப் பற்றுதலினாலுண்டாகும் மெய்த்தன்மையை (சத்துத்தன்மையை) அடைதலே 'மெய்ம்மையாம் உழவைச் செய்த'லாகும். மெய்ம்மையாம் உழவு செய்தலையும் பொய்ம்மையாங் களையை வாங்குதலையும் ஒரு சேர எடுத்துக் கொண்டு பொருளுரைத்தல் வேண்டும், பொய்மை

நீங்க நீங்க மெய்மை விளங்கும் ஆதலின், "சுட்டி யுணர்வதனைச்சுட்டி அசத்தென்னச் சட்ட இனியுளது சத்தேகாண்" (சிவஞான போத வெண்பா) என்ற கருத்தும் இதுவே. இது அறிவு விளக்கத்தைக் குறிக்கின்றது. "விருப்பெனும் வித்தை வித்தி" என்ற சொற்றொடரையும் "பொறையெனும் நீரைப்பாய்ச்சி" என்ற சொற்றொடரையும் ஒரு சேர எடுத்துப் பொருளுரைத்தல் வேண்டும்; பொறுமை மிகமிக அன்பும் வளர்கின்றது. ஆதலின், இது அன்பு விளக்கத்தைக் குறிக்கின்றது. இந்த அறிவு விளக்கமும் அன்பு விளக்கமும் நிறைவு பெற்று கக-வது சூத்திரத்திற் கூறப்பட்ட "அயரா அன்பு" ஆகின்றது.

4. தம்மையு நோக்கிக் காணுதலாவது. பேரின்ப விருப்பன் உடைப்பொருளாகிய தனது இயல்பினை யுணர்ந்து தன்னை உடையானாகிய கடவுளியல்பினையும் தனது உயிரறிவில் வைத்து அறிதல் ஆகும். இதுவே சிவஞான போதம் க0-வது சூத்திரத்திற் கூறப்படுவது. தகவு என்னும் வேலியிடுதலாவது "எண்ணும் அஞ்செழுத்தே" என்று கூ-வது சூத்திரத்தில் "பாசம் ஒருவ" என்பதற்குப்பின் கூறப்படுவது. சிவகதி விளைதலாவது கக-ம் சூத்திரத்திற் கூறப்பட்ட "அரன் கழல் செலுமே" என்பது. இவ்வாறு சிவஞானபோதம் அ-வது சூத்திர முதல் கக-வது சூத்திர இறுதி வரை கூறப்பட்ட கருத்துக்கள் இந்தப்பாட்டில் சுருக்கமாகக் கூறியிருத்தல் காண்க.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

சைவ இளைஞர் மகாநாடு தலைவர் பேருரை

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். எல்.]

சைவ இளைஞர் பொருட்டு முதல் முதல் கூட்டப்படும் இம் மகா நாட்டிற்கு என்னைத் தலைமை பூணும்படி கேட்டமைக்குக் காரணம் இளைஞரைப்போலப் பயிற்சி போதாமை என்பால் காணப்படுதல் போலும். நான் அதற்கு இசைந்தது எதனாலோ எனின் இளைஞர்பாலுள்ள உள்ளக் கிளர்ச்சி, களங்க மின்மை, விடாமுயற்சி முதலிய பல நற்பண்புகளைப் பெற்றுக் கொள்ளுதற்கும் அன்னோர்க்கு அறிவுரை பகர வந்துள்ள மாட்சிமை

தங்கிய பேரமைச்சர் முதலிய பெரியோரது பயிற்சிமிக்க போதனையின் பயன் கொள்ளுதற்கும் வாய்ப்பு அமைதலின என்க.

இம்மகா நாட்டைத் திறந்த பேரமைச்சரது அறிவுரைகளின் விளக்கமாக யான் செப்பும் சிற்றுரையைக் கருதுக. இளமைப் பருவமானது எல்லா நலத்திற்கும் வித்திடும் பருவமாதலின், எல்லா நலத்தையும் விளக்கவல்ல கல்வியினை இளமையிற் பயிலுதல் வேண்டுமென்று நமது முன்னோர் கூறினர். 'இளமையிற் கல்வி சிலையினெழுத்து' என்பதைக் காண்க. கற்கும் கலைகளை எல்லாம் தொழிற்கலை, கவின்கலை, மெய்க்கலை என மூன்றாகப் பிரித்தல் கூடும். உடல் வாழ்க்கை நிலை பெறுதற்கு வேண்டும் ஊதியங்கருதிப் பயிலப்படும் உழவு, கைத்தொழில், வணிகம் முதலியவற்றின் சார்பான கலைகளை எல்லாம் தொழிற்கலை எனலாம். ஐம்புலனிற்கும் மனதிற்கும் இன்பம் பயக்கவல்ல பாட்டு, இசை, கூத்து, ஓவியம், சிற்பம் முதலிய அழகினைச்சிறப்பிக்கும் கலைகளெல்லாம் கவின்கலை எனப்படும். இனி மெய்க்கலை என்பது தோன்றும் பொருள்களின் தன்மைகளை ஆராயும் கலைஎனவும், தோன்றும் பொருள்களுக்கெல்லாம் அடிப்படையாயுள்ள முடிவான உண்மைப் பொருளை ஆயும் முடிந்தலை எனவும் இருதிறப்படும். முன்னவற்றை அறிவியல் நூலின் (Science) பாலனவாகவும் பின்னவற்றைத் தத்துவ நூலின் (Philosophy) பாலனவாகவும் மேல் நாட்டினர் கருதுவர். இன்னொரு முறையாகப் பார்க்குமிடத்து உலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் வகுத்து வகுத்து ஆயும் முறை அறிவியல் நூல் என்றும், எல்லாப் பொருளும் தொக்க பிண்டமாகிய உலகத்திற்கு ஆதாரம் யாதென்று ஆயும் முறை தத்துவநூல் முறையாகவும் கொள்ளப்படும்.

தத்துவநூல் ஆராய்ச்சியில் நமது முன்னோர் தலை சிறந்து விளங்கினர். அஃதே சமய உணர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது. எக்கலையினும் மெய்க்கலை உயர்ந்ததாலும், அதன் கண்ணும் முடிந்த மெய்ப்பொருளை ஆய்ந்தறியும் சமயக் கலையானது மிக

மேம்பாடு உடையது ஆதலானும், சமயக்கலையின் பயனையே கல்வியின் விழுமிய பெரும்பயனாக ஆசிரியர் திருவள்ளுவர் முதலிய பேரறிஞர்கள் அறுதியிட்டு உரைத்தனர்.

> கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்
>
> எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தோன்
> மொழித்திரத்தின் முட்டறுப்பான் ஆகும்—மொழித்திரத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்.

என்ற விடத்து இலக்கண இலக்கியங்களின் குற்றமற்ற பயிற்சியினது முடிந்த மெய்ந்நூற் பொருளுணர்ந்து, பற்று நீங்கி, வீடு பெறுதற்குக் கருவி என்று கூறியது காண்க.

முடிந்த மெய்க்கலையின் சாரமே சைவத்தின் உட்கிடையாம். தென்னாடுடைய சிவனே போற்றி என்பதற் கேற்பச் சிவநெறியானது பண்டைத் தமிழரது சமய நெறியாய் நிலவினமையான் அதன் உயிர் கருத்துக்கள் தொல்காப்பியம், திருவள்ளுவர் முதலிய பண்டைத் தமிழ் நூல்களில் பொதிந்து கிடப்பதை வைத்து இறுதி ஊகிக்கப்படும். தொல்காப்பியமானது இப்பொழுதுள்ள வடமொழி வியாகரணமாகிய பாணினியம் இயற்றப் படுதற்கு முன்னே தோன்றி மறைந்த ஐந்திரத்தினோடு ஒத்த காலத்ததெனக் கருதுமிடத்து அதன் பழமை நன்கு புலனாகும். அத்துணைப் பழமையாகிய காலத்தைக் கடவுள் உயிர் உலகம் என்ற முப்பொருள் உண்மை தமிழ் நாட்டிலே எங்கும் வழங்கிவந்தது என்பது அவற்றின் சார்பாகிய சொற்களை எழுத்துக்களுக்கு உருவகப் பெயர்களாக ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்டமையால் இனிது விளங்கும். ஆய்தம், உயிர், மெய் என்ற மூன்று சொற்களையும் உற்று நோக்குக. ஆய்தம் என்பது நுண்ணிது என்று பொருள்படும். எல்லா எழுத்தொலிகளும் தோன்றுதற்கு அடிப்படையாய் உள்ள மூச்சானது நுண்ணிதாய் எழுத்தொலி புலனாதற்கு ஏதுவாகிய காற்றுத் தொகுதியோடு கலந்திருத்தலின் அதனையே ஆய்தம் என்றார்.

அது மூலமாகிய எழுத்தொலியிறோடு கலந்தே ஒலித்தலின் அதனைச் சார்பெழுத் தென்றார். எல்லாப் பொருளுக்கும் ஆதார மாய்த் தோன்றாத அடிப்படியாய் அவற்றோடு சார்ந்து நிற்கும் மெய்ப் பரம்பொருளை புணர்தலே சார்புணர்தல் என ஆசிரியர் திருவள்ளுவனார் மெய்யுணர்தல் அதிகாரத்தில் குறித்தமை காண்க. "சார்பிணல் தோன்றாது தானறுவாய் எப்பொருட் கும், ஏனின்று எஞ்ஞான்றும் இன்பம் தகைத்தோர்" என்ற விடத்தும் இக்கருத்து வலியுறுதல் காண்க. எல்லாப்பொருட் கும் சார்பாகிய முதல்வன் அப்பொருள்களின் இயல்பிலனாய் அவற்றின் வேறான தன்மையுடையனாய் இருத்தலின் தனி முத லெனப் படுவன். அவ்வாறு உயிரொடும் மெய்யொடும் சாராது வெற்றியல்புடைய ஆய்தமானது தனிநிலை எனப்படுதல்காண்க.

இனி எப்பொருட்கும் இன்பம் ஈயும் இறைவனின் வேறாக அவ்வின்பத்தைப்பெறும் உயிர்கள் பல என்பதும் தொல்காப் பியத்துட் போந்த கருத்தேயாகும். "வினையின் நீங்கி விளங் கிய அறிவின் முனைவன்" என்ற விடத்து உயிர்கள் வினை வசப் பட்டு அறிவு மயங்கப் பெறுவன என்பது குறிப்பானறியக் கிடக்கின்றது. வினைக்கு ஏதுவாக எடுக்கும் உடம்பே மெய் யெனப்படுதலின் உயிர் ஊர்ந்து வரும் எழுத்துக்களை மெய் யெழுத்தெனவும் ஊரும் எழுத்துக்களை உயிரெனவும் குறியீடு செய்து கொண்டமை மிகவும் வியக்கத்தக்கது. மெய்யென்பதே தத்துவம் என்னும் வடசொல்லின் பொருளாகும். தத்துவக் கூட்டமே உலகமாதலின் மெய்யென்ற விடத்து உலகம் சுட்டப் பட்டதென அறிக. இதுவரை கூறிய வற்றால் சைவசித்தாந் தத்துட் போந்த முப்பொருளுண்மை தொல்காப்பிய எழுத் ததிகாரத்துள் அமைந்து கிடக்கின்றது என்பது இனிது புலனா கும். இதனைப்பற்றிய விரிந்த ஆராய்ச்சி பிற்காலத்து நூல் களில் காணப்படும். இப்போது நாம் ஒரு தலையாக உள்ளத் தில் பதித்துக் கொள்வது யாதெனில் எல்லாம்வல்ல முழு முதற் கடவுள் ஒருவன் உண்டென்பதும் அவனன்றி ஓரணுவும் அசையாதென்பதும் ஆகிய முடிந்த உண்மைகளேயாம். இக்

கருத்தினையே வடமொழி உபநிடதங்களும் பாரசீகப் பண்டைப் பல் நூல்களும் கிரேக்க தத்துவநூலும் வெவ்வேறு வகையாகப் பகர்கின்றன. தற்காலத்திலே மேல்நாட்டுத் தத்துவ உணர்ச்சி சான்றவர்கள் அறிவுடையோர் முழுமுதற் பொருளே அறிவில்லாத பொருட் பிண்டமாகிய உலகத்திற்கு ஆதாரமாய் உள்ளதென்பதை முடிவாகக் கைக்கொண்டுள்ளார்கள். இம் முடிந்த வுண்மையை அறியாத பலர் இக்காலத்திலும் முற்காலத்திலும் நாத்திக வாதம் பேசி யொழிந்தனர்.

கடவுள் உண்மை உணர்ச்சிக்குத் தடையாய் நிற்பனவற்றுள் ஒன்று யாதெனில் மக்களது முற்றுப்பெறாத அவாவேயாம். நினைந்ததொன்று முடியவேண்டுமென்று கருதுபவன் கடவுளை வணங்கியும் அது முடிவு பெறாத விடத்து நாத்திக வாதத்தை மேற்கொண்டும் நிற்கின்றான். தான் செய் வினைக்குத் தக்க பயனை ஒருவன் அடைகின்றான் என்பதையும் வினை செய்தல் ஒரு பிறவியிலும் அவ்வினையின் பயனை நுகருதல் மற்றொரு பிறவியிலும் நிகழ்தல் கூடுமென்பதே உணராததாகும். தமக்குத் தக்கவற்றை அறிந்து உதவுகின்றார். கடவுள், துன்பத்தைக் கொடுத்தாலும் தம்மைப் பக்குவப்படுத்தி உய்வித்தல் பொருட்டே என்னும் கருத்துக்களை மனதில் பதித்துக்கொள்ளல் வேண்டும் என்பதை வற்புறுத்தவே ஆசிரியர் திருவள்ளுவனார்,

> அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்
> செவ்வியான் கேடும் நினைக்கப்படும்.

என்று உறுதி கூறிப் போந்தனர். ஆங்கிலத்திலும் (God knows what is best for us) என்பதும் கடைப்பிடிக்கத் தக்கதே. 'வேண்டுவார் வேண்டியதே ஈவான்' என்ற திருவாக்கிற்குப் பொருளினை ஆய்ந்துகொள்ளல் வேண்டும். வேண்டுவார் என்ற சொல்லானது வேண்டும் தகுதியுடையார் என்று பொருள்படும். "தாமென்றும் மனந் தளராத் தகுதியினால் உலகத்துக்கு ஆமென்று சரண்புகுந்தார் தமைக் காக்கும் கருணையினன்" என்ற திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்கினால் எக்

காலத்தும் மனந்தளராமையும் தான் மனத்தொடு இறைவன் செயல் யாவும் நன்மையே என்று கருதிச் சரண்புகுதலுமாகிய தகுதியுடையோரே இறைவனது சிறந்த கருணைக்குரியவர் என்பது தெளியப்படும். பயன் கருதாது இறைவனை வழிபட்டால் அது கிடையாதபோது நாத்திகம் தலை எடுத்தலின் பயன் கருதாது கடவுளை வழிபடுகவெனப் பெரியோர்கள் கூறுவாராயினர். பயன் கருதற்கு ஏது, ஆசையாதலின் ஆசையற்ற இடத்திலே தான் தெய்வ உணர்ச்சி நிலைபெறும் என்ற கருத்தினைத் தாயுமானப் பெரியார் "நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ" என்றார். ஆதலால் இறைவனடிக்குப் பயன் கருதாது அன்பு செலுத்துதலே சிறந்த வழிபாடாகும். காதலற்கு அன்பினால் விளையும் இன்பம்போல இறையன்பினால் அடியார்க்கு இன்பம் விளையும். "இறவாத இன்ப" அன்பு என்பதும் அது. இவ்வாறே நமது சமயக்கருத்துக்கள் பிறவற்றையும் ஆய்ந்து உண்மை தெளிக. ஈண்டு அவற்றை விரிப்பில் பெருகும். சைவத்திலே எவ்வுயிர்க்கும் இரக்கம் வைத்தல் சிறந்த கொள்கையாகத் தழுவப் படுதலானும் ஒழுக்கம் பற்றியே உயர்வு என்பது தமிழ்க் கொள்கை யாதலானும் சைவ இளைஞர் யாவரும், அருள் ஒழுக்கமும், விரிந்தநோக்கமும், குற்றம் பொறுக்கும் குணமும், ஒற்றுமையும், விடாமுயற்சியும் உடையவர்களாய்த் திகழ்தல் வேண்டும்.

சைவத்தின் சிறந்த உண்மைகளை உலகத்தில் வெளிப்படுத்தினால் உலகிலுள்ள அறிஞர் யாவரும் அவற்றை மேற்கொள்வர், "ஞால நின்புகழே மிக வேண்டும்" என்ற நமது பரமாசாரியார் திருவுள்ளக்கருத்தினை யாவரும் நிறைவேற்ற முயலவேண்டும்.

சைவ வொளியானது எங்கும் பரவுதற்பொருட்டுச் சைவ சித்தாந்தக் கலாசாலை, சைவ நூல் நிலையம், சைவ போதகாசிரியர் நியமனம், சைவர் விடுதி, சைவ நூல் வெளியீடு முதலிய பேரறங்கள் முதலியவற்றையும் சைவ ஆதீனத் தலைவர்களும் பிற சைவச்செல்வர்களும் கோயிலதிகாரிகளும் அமைத்து நன்கு நடத்திச் சைவர்க்கும் சைவ இளைஞர்க்கும் பேருதவி புரியு

மாறு திருவருள் சுரக்கும் பொருட்டு எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகிறேன். சுபம்.

கடன் கோடல்

(திரு, டி. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள் பி. ஏ.)

கடன் கோடல் மிகக்கேடு பயக்கும் தீயதோர் பழக்கம். அப்பழக்கத்துக்கு மக்கள் பலர் அடிமையாகி அவ்வடிமையினின்றும் மீளும் வழியறியாது அல்லற்குட்பட்டு உழல்கின்றார்கள். சில நாடுகள் கடன் கொண்டு அக்கடனைத் தீர்க்கமாட்டாது விழித்துக் கொண்டிருக்கின்றன. கடன் கொண்டவன் படும் துன்பத்திற்கோர் எல்லையில்லை. வீரருள் வீரனுய இலங்கை மன்னன் பட்ட துன்பத்தைக் கடன் பட்டான் கலக்கத்திற்கு உவமையாக்கிக் கூறினார் கவியரசர். நம் நாட்டு மக்களுள் கடன் படாது வாழ்கின்றவர் மிகச் சிலர்; கடன் பட்டு உழல்கின்றவர் எண்ணிறந்தவர்.

கடன் கொண்டார் கூட்டத்தைச் சிறிது ஆராயின் அக்கூட்டத்துள்ளே, நிலக் கிழவரையும் வணிகர்களையும், தொழிலாளர்களையும் வழக்கறிஞர்களையும், அரசவினைவர்களையும் மற்றும் பலரையும் காணலாம். கடன் கொண்டாரை ஓர் தனிப்பிறப்பாளர் என்னலாம். அவர்கள் ஓர் தனித்த சாதி. மக்களைக் கடன் கொள்வாரும், கொடுப்பாரும் என இரு பெரும் பிரிவுக் குட்படுத்தலாம். ஆகவே அவர்கள், வெவ்வேறு ஜாதியைச் சார்ந்தவர்கள், தனித்தனி மெய்ச் சாயலையுடையவர்கள். ஆங்கிலப் புலவர் ஒருவர், மக்களை காக்கேசியர், மங்கோலியர், ஆரியர், அநாரியர் என்று பிரிப்பதில் பயனில்லை என்றும், அவ்வம் மக்கட்கூட்டத்துள்ளும், கடன் கொள்வாரும், கொடுப்பாருமாய இருவகை மக்களைக் காணலா மென்றும், மக்களை அவ்விரு பிரிவின் கீழ்ப் படுத்தலே ஏற்புடைத் தென்றும்' கூறுகிறார். அவருள்ளும் கடன் கொள்வாரே உயரிய மக்கள் என்றும் கூறுகிறார். கடன் கொடுப்பவன் மேலும் மேலும் தன்

பொருளைப் பெருக்குவதில் கருத்துடையனாய்ப், பகலென்றும் இரவென்றும் பாராது, வட்டிகருதி முதலிழக்கும் உளம் வாய்த்து, கடும் பற்றுள்ளமுடையனாய், தன் பெட்டியில் பொருளிருப்பதை 'வட்டியின்றி முடங்கியிருக்கின்றதே' எனப் பெரிதும் கவன்று, வட்டிக்குக்கடன் வாங்கு வாரை எதிர்நோக்கி நிற்கின்றான். அந்தோ! இவன் ஏழை! கவலைக்கோர் இருப்பிடம், கவலைக்கே பிறந்தவன்.

கடன் கொள்வானோ, 'கடனும் கிடைக்கும்; கொடுப்பாரும் பலர் உண்டிவ்விரிந்த உலகத்தில்' என்று எண்ணுமமதிகை யுடையனாய், வட்டிக்கு வாங்கப்பட்டதாயினும், "செல்வத்துப் பயன் துய்த்தலே" என்று கருதி அதை ஐம்புலநுகர்ச்சிக்குச் செலவிட்டு இன்பம் துய்க்கின்றான். பொருளைப் பலர்க்கும வழங்குகின்றான். கண்டாரெல்லாம் அவனைக் கன்னன் என்கின்றார்கள். நாளைக்கென் செய்வோம் என்னும் கருத்து அவன் நெஞ்சத்தில் எழுவதில்லை. அழுத்துவதுமில்லை. எப்போதும் இன்பத்தில் ஆழ்ந்துள்ளான். கவலையின்றித் திரிகின்றான். அக்கடன் கொள்வார் கூட்டத்துள் இன்னும் வேறு சிலர், எப்பொழுதும், பட்டும் துகிலும் உடுத்தித்திரிவர். அமிழ்தன்ன அடிசிலுண்டு ஏமாப்பர். அத்தகையாரைக் கண்ட அளவில், கவலைக்கே கொள்கலமாம் கடன் கொடுப்பான், இத்தகையாருக்கு நம் பொருள் சிறிதேனும் கடன் கொடுக்கப்பட வேண்டுமென ஆசை கொள்கிறான். அவர் வாய் திறந்து கடன் கேட்டு விட்டாலோ தனக்கு ஓர் பெரும் பேறு வாய்த்தது போல் மதித்துத் தடை சொல்லாது கொடுக்கின்றான்.

இன்னும் சில கடன் கொண்டாருடைய நடையையும் உடையையுங் கண்டார் பலர், அவரைச் செல்வத்திற் பிறந்த செல்வத் தோன்றல்கள் என மயங்குகிறார்கள்.

'கடன் கொடுக்கவும் வேண்டாம், கொள்ளவும் வேண்டாம்' என, ஆங்கிலப் புலவர் ஒருவர் அறிவு மொழி கூறுகிறார். கடன் கொள்ளும்போது ஒருவனுக்கு அது கொடுப்பானிடத்துளதாய பற்றும், நன்மதிப்பும், அதைக் கேட்டக்கால் இருப்ப-

தில்லை, இத்தன்மை இன்றுதான் மக்களிடத்துத் தோன்றிய புதியதோருணர்ச்சியில்லை: 'கலித் தொகைக்' காலத்திலேயே, உள்ளது.

'உண் கடன் வழி மொழிந்திரங்குங் கான் முகனும்
கொண்டது கொடுக்குங் கான் முகனும் வேறுகுதல்
பண்டு மிவ்வுலகத்தியற்கை யஃதின்றும்
புதுவதன்றே புலனுடை மாந்திர்,'

என்ற கலியில், தலைமகன் தலைவியிடத்திற் காதலிரந்து நிற்கும்போது அவற்கு உண்டாய முகமலர்ச்சியும், மென்மையும், தலைவி தலைமகனைப் பிரிவதற்கு அஞ்சி அவனைத் தன்னுடனிருக்குமாறு இரந்தக்கால் அழிவதைக், கடன் கொள்வார் கொள்ளுங்கால் கொள்ளும் முகமலர்ச்சி பின் அதனைக் கொடுத்தார் கேட்குங்கால் அழிவதை நிகர்க்குமென அழகு பிறங்கக் கூறப் பட்டுள்ளது.

பெருந் திரளான நிதியத்தைக் குவியல் போல் திரட்டல் ஒருவர்க்கு இயலாததாயிருக்கலாம். ஆனால் யாரும் கடன் கொள்ளாது இருக்கலாமே. 'தாளாளன் என்பான் கடன் படா வாழ்பவன்' எனக் கூறினர் ஆன்றோரும். தாளாற்றலால் பெற்ற பொருளைத் துய்த்தல் சரி. அதனை அறவும் செலவிட்டு மேலும் கடன் கோடல் சரியா ? சரியன்று, அறமுமன்று.

தமிழ் நாட்டு மக்கள் பெரும்பாலும் தத்தம் வரவும் செலவும் நோக்காதும், மனம்போம் நெறியில் சென்றும், பொருளைச் செலவிட்டுக் கடன் பட்டுழல்கின்றார்கள்.

'ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

என்ற பொய்யா மொழி அரசர்க்கும் ஒக்கும்: ஏழைகட்கும் ஒக்கும். அந்நெறியை அரசரும், குடிகளும் ஒருங்கே பின் பற்றினால் அவர்களுக்குப் பெரிதும் நன்மை விளையும். அந்நெறியைக் கடைப் பிடிக்காமையினால் தான், வணிகரும், நிலக்கிழவரும், அரசரும், அமைச்சரும், சிற்சிலபோது செய்வதின்னதென்றறியாது தலைமேல் கைவைத்துத் துன்பமெய்துகின்றனர்.

நம் நாட்டு மக்கள், மணம் என்றால் ஆயிரமும், இழவென்றால் ஈராயிரமும், இது என்றால் ஆயிரமும், அது என்றால் ஐயாயிரமும் எண்ணாது செலவிட்டு, இறுதியில் இடும்பையிற் படுகின்றார்கள். சடங்குகள் வேண்டும்; ஆனால் அச்சடங்குகளுக்கு ஓர் எல்லையும் வேண்டும். சடங்கு, செய்வானது பொருளளவிற்கு ஏற்றபடி செய்யப்படல் வேண்டும். சடங்குகளின் எண்ணம் மிகக் குறைவுபட வேண்டும். பயனில் சடங்குகளைப் போக்குதல் வேண்டும்.

'வருவாயுட் கால் வழங்கவேண்டு' மென்று ஆன்றோர் கூறியிருப்பதைக் கடன் கொள்வார்தங்கருத்தில் ஊன்றி நோக்குதல் வேண்டும். அம் முதுமொழிப்படி ஒவ்வொருவரும் தத்தம் வருவாயில் கால்பகுதியை மீதி வைத்தல் வேண்டும். கண்ணிற் கண்ட பொருள் எல்லாம் வாங்குதல் வேண்டுமென்கின்ற பெரும் பித்து ஒழிதல் வேண்டும். செட்டாக ஒவ்வொருவரும் செலவிடல் வேண்டும்.

நிலக் கிழவர்களும், உழவர்களும், இக்காலத்து உழவு ஊதியம் தருவதில்லை எனக் கூறுகிறார்கள். பயிர்த்தொழில் செய்வாரிற் பெரும்பாலார் கடன் வாய்ப்பட்டிருத்தல் தான் அவர்க்கு அத்தொழில் ஊதியம் தாராமைக்குக் காரணம். பயிர்த் தொழில் செய்வார், உழவு காலமுதல் அறுவடை காலம் வரையில் கையில் பணமில்லாது கடன் வாங்குவதாகவே இருந்தால் பயிர்த் தொழிலும் அதன் பற்பல வினைகளும் அதனதன் பருவத்தில் எவ்வாறு நடை பெறும்? ஆதலின் மக்கள், வாழ்க்கையில் பொருட் செட்டையும், தொழிற் செட்டையும் கைப்பற்றினால் பெருமையை யடையலாம். நம் நாட்டு மக்கள் மடிமையெய்திச் சோம்பித்திரிகின்றனர். தொழில் செய்வதில் அவர்க்கு விருப்பமில்லை. அவர்கள் தங்களுக்கு யாராவது ஒருவர் வலிந்து வந்து வாயில் உணவு ஊட்ட வேண்டுமென்று கருதுகிறார்கள். ஊக்கமுடையானுக்கே கடவுள் துணை செய்கிறார். மடியுளானுக்கு மாமுகடி துணை செய்கின்றாள்.

தமிழ் நாட்டு மக்கள் பசித்திருந்தால், அது அம் மக்களின்

குறை; அது மடிமையின் பிள்ளை. கை செய்வார்க்கு நிலம் பெரிதும் பயனளிக்கும்.

இன்பத்தை விரும்புவார் கடன் வாங்காதிருத்தல் வேண்டும். பொருளைச் செட்டாகச் செலவு செய்தல் வேண்டும். வருவாயுட் கால் வழங்குதல் வேண்டும். மடியிலாது ஊக்க முடையராய் வினை செய்தல் வேண்டும்.

இன்பமும் வெளிப்பகட்டும் *

[அ. சிதம்பரநாதன் B. A.]

ஐரோப்பிய நாட்டு மன்னர்கள் நன்னடக்கையுள்ள குடிகளுக்குப் பரிசளிக்கும் விதமொன்று புதிதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். அஃதாவது நாட்டிற்கும் மன்னர்க்கும் உண்மை யூழியஞ்செய்யும் பெருமக்களுக்கு நான்கு முழம் நீளமுள்ள † நீலநூல் வடங்களைக் கண்டத்தைச் சுற்றி யணியும் பொருட் டளிப்பதேயாம். இக்குறியீட்டுப் பெருமை யுடையோர் ஒவ்வொருவரும் மன்னனையே தலைவனாகக் கொண்ட கூட்டத்துளொருவராய் மதிக்கப்பட்டு "நீரர்" என்றழைக்கப்படுவர். மிகச்சிறந்த ஊழியங்களுக்கும் மிகவும் கையிறுக்கமாகப் பரிசிலளிக்கும் வழியிதுவே; குடிகள் இத்தகைய அற்பமான பரிசில்களைப்பெற்று நிறைந்த மனத்தினராய் விடல் மன்னரின் நற்காலமேயாகும். தன்னாட்டுப் பெருமையைக் காப்பான் வேண்டித் தனது பெற்றோரால் வந்த பொருளனைத்தையும் அயல் நாட்டிற் செலவிட்ட தூதனுக்கு மன்னனாலளிக்கப்படும் நாலு முழ நூல் வடம் இழக்கப்பட்ட பொருளுக்கு ஒப்பானதாய்க் கருதப்பட வேண்டியிருக்கிறது, குறுகக்கூறின், நீலம் அல்லது பச்சை நிறமுள்ள நூல்வடம் இரண்டு முழ நீளமளவாவது கையிலிருப்பின் ஐரோப்பிய நாட்டு மன்னன் அமைச்சரை

---

* இது கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கில நாட்டுப்புலவர் எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பாகும்.

† இவ்வடங்கள் அரசாங்கத்தாரா லளிக்கப்படும் பட்டங்களின் குறியீடாகும்.

யும் படைத்தலைவரையும் படையாட்களையும் பெறுதலைக் குறித்துக் கவலையுற வேண்டுவதில்லை.

வெறும் வெகுமதிகளுக்காகக் கொடிய கடுமையை மேற்கொள்ள விரும்பும் பெரும்பொருள் படைத்த முத்தரையருள்ள நாடுகளை நான் பெரிதும் வியப்பதற்கில்லை. போதியவளவு பொருள் படைத்த வொருவன் வேணவா கொண்டு முற்படுவானாயின், தனது நிலையினின்று பற்பல இடையூறுகளுக்குள்ளாவான். ஆனால், அவன் முன் பெற்றிராத எவ்வித உண்மையான இன்பத்தையும் வேணவா நடையால் அடைதலில்லை. ஆதிக்கம் பெற்றுத் துய்ப்பதற்கொப்பாகவோ அன்றி மேலாகவோ அவன் மன்னன் தோழனுகு முன் உண்டு முடித்தியுங் குடித்து முறங்கியுமிருக்கக் கூடும், ஊர்ப்பொது வாழ்வு முறையிற் பெறுவதே போல் தானிருக்குமிடத்திலேயே இச்சகம்பேசித் திரிவோரைப் பெறக்கூடும். அம்மாத்திரமோ! பிறரால் பார்க்கப்படாமலும் பழிக்கப்படாமலும் தன் மட்டில் தன் மனதுக்கிசைந்தவற்றையும் செய்து கொள்ளக்கூடும்.

முன்னாலேயே போதியவளவு பொருளுடையோன் பின்னுஞ் சிறிது சேர்த்தலால் என்ன உண்மை நலத்தை அடைகிறான்? ஒன்றுமில்லை. பெரிய மனிதன் தனது பொருட் செல்வத்தைப் பெருக்குவதால் தனது பசியையும் பெருக்கக் கூடுமானால் பொருட் பெருக்கத்தால் வரும் கொண்டாட்ட மென்பதொன்றை யடைகிறானென்று கூறலாம். ஆயிரத்தை ஈராயிரமாகச் செய்வதால் இரண்டு மனைவிகளுடன் ஒரே காலத்திற் கூடவோ இரண்டு முழுச்சாப்பாடுகளை ஒரே காலத்திற் சாப்பிடவோ அவனால் முடியுமானால், தனது துப்புரவைப் பெருக்கிக் கொள்ள அவன் ஏதோ சிறிது துன்பத்துக் குள்ளாதலைப் புறக்கணித்து விடலாம். ஆனால், அவன் அகலப்படுத்த முயலுவதற்கெதிராக அவனுக்கு இன்பத்தின்கணுள்ள அவா குறைகின்றதைக் காணலாம். அம்மட்டோ! அவனது ஆக்கம் பெருகத் தொடங்கவே அவனது இன்பநுகரு மாற்றல் குறைந்து விடுகிறது.

ஆதலால் செல்வரிடத்து அழுக்காறு கொள்ளுவதற்கு மாறாகச் சிறிது இரக்கத்துடனேயே அவர்களைப்பற்றிப் பொது வாக நான் நினைப்பதுண்டு. அவர் நுகருமின்பத்திற்காக அவருக்கின்றி நமக்கே கடப்பாடுடையவராய் வழியல்லா வழியிற் செலுத்தப்படும் நற்குணமுள்ள மக்களாகவே அவர்களை நான் கருதுவதுண்டு. அவர் நெற்றிவியர்வை நிலத்தில் விழும்படி ஒய்யாரமாக அணிகளை மெய்மீது வாரிப்போட்டுக்கொண்டு சுமப்பது நம்முடைய மகிழ்ச்சிக்கேயன்றி அவருடைய இன்பத்திற்காகவன்று. நம்முடைய மகிழ்ச்சிக்காகவே அவருடைய கையாட்களும் காலாட்களுமாகிய குற்றேவற் கூட்டத்தார் வேடிக்கையாக நம் முன்னே பொற்புடன் போகின்றனர். தேர்ந்த அயர்வினரின் எல்லா வேலைகளையுங்கூட ஒரே வேலையாள் செய்து விடக்கூடும். அவ்வாறிருக்கவும் இருபது ஆட்களையுடையோர் தமது இன்பத்திற்கு ஒருவரையும் நம்முடைய இன்பத்திற்காக ஏனைய பத்தொன்பதின்மரையும் வைத்திருக்கிறார்கள். ஆதலால் "நம்மை மகிழ்ச்சி உடையவராக நாமே நினைத்துக் கொள்வதினும் மிகுதியாக நாம் மகிழ்ச்சி யுறுவதாகப் பிறரை நினைக்கச் செய்தலில் ஊக்கம் பெரிதும் காட்டுகிறோம்" என்று * கான்பூழியர் கூறியது பேருண்மையேயாம்.

பிறர் தம்மைப் பார்க்கவேண்டும் பார்த்துப் பேசவேண்டும் புகழவேண்டும் என்ற விருப்பம் அவ்விருப்பமுடையாருக்குச் சில கடுமையான அலுவல்களைக் கொடுக்கக் கூடியதாயிருப்பினும், அவர் தமது இன்பத்தையும் கவலையின்மையையும் துன்பத்திற்கும் முழுநீள நூலுக்கும் மாற்றாகக் கொடுக்க முன்வருவது மக்கள் குழாத்தின் நலத்திற்கேயாம். அவருடைய பகட்டினால் நாமிழப்ப தொன்றுமில்லை ஒரு முத்தரையரோ ஒரு பெரு மனிதரோ நூற்றுக்கணக்கான வேலையாட்களுடன் நம் நடுவே வரின், நாமிழப்ப தொன்றுமில்லை, அவ்வாறு வருமவர்க்கு இன்பத்தைக் கொடுத்தலும் அவரைப்பார்த்து இன்பத்தை

* கான்பூழியர் என்பவர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சீனநாட்டிலிருந்த ஒரு முனிவராவர். அவரும் கௌதம புத்தரும் ஒத்த காலத்தவர்.

அடைதலும் நம்மால்தானாகும். இங்கு ஒரு சிறு கதையைக் கூறின் மேற் கூறியது நன்கு விளங்கும்.

சீனநாட்டு முத்தரையரொருவர் தமது ஆடையின் ஒவ்வொரு பகுதியிலும் பற்பல அணிகளை அணிந்து கொண்டு பகட்டாக ஊரார் முன்னே வரும் வழக்கமுண்டு. ஒருநாள் அவர் அவ்வாறு வருங்கால் ஒருவயது முதிர்ந்த சீனநாட்டுக் குருக்கள் அவரைப் பல தெருக்கள் வழியே தொடர்ந்து சென்று வணங்கி வணங்கித் தமது வந்தனத்தைத் தந்தனராம். முடியிலிருந்து அடிவரை அணியணிந்த அம்முத்தரையர் "எதற்காக நீ இவ்வாறு பணிகிறாய்" என வினவினராம். அதற்கு அக்குருக்கள் விடை பகர்ந்ததாவது :—

"அன்ப ! நான் உனக்கு யாதொரு அணியுமளித்தேனல்லேன். ஆயினும், நீ அணிந்துள்ள பல அணிகளையும் பார்க்க விடுத்தனையன்றோ! அவ்வளவு பயன்தானே நீயும் அவ்வணிகளானடைய முடியும் !! ஆதலால், நீ அவைகளைக் காப்பதற்காக வேண்டித் துன்பப் படுதலைத் தவிர உனக்கும் எனக்கும் உள்ள வேற்றுமையில்லை. அக்காத்தல் துன்பத்தை யான் விரும்பவில்லை."

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள."

சிவநெறி மாண்பு

[ரத்னபுரி K. சிதம்பரநாதனவர்கள்]

(239-ம் பக்கத் தொடர்ச்சி)

மாயும் (infinite & intermittent) மாயை இயல்பில் காரியமிருப்ப வென்றும் காரண முளதாம் முறையில் காரண காரியமாயும் (infinite and causative) விளங்க நின்றது குறிக்கற்பாலது. ஆதியெனக் கண்டவிடத்துக் காலதேச வர்த்தமான

வரையறை யுண்டாதல் பற்றி அவற்றிற் கதீதமாய் அறிவிற் கெட்டாததாய் நிற்குமாற்றான் எவ்வாறு நிலைக்குமென ஆய்ந்து தெளியக் கண்டபடி கொண்ட அநாதிநிலை யுண்மை யிது சிவ நெறியிற் றெரித்ததென்ப. எனவே, ஏனைய மதங்கள் போல் மூலகன்மத்தை ஆதாமேவாளிலோ அன்றிச் சாத்தானிலோ அன்றி அவனையும் நிற்கவிட்ட கடவுளிலேயோ பொறுப்பித்து விட்டுப் பின் கொடுக்கும் தண்டனை உபகாரங்கட்கும் அவ் விறைவன் மேலேயே பழியைச் சுமத்தி அவரதிறைமைக் குணத்தை யிழிவு காட்டி உயிர்கட் கியல்பாம் மயலையும் தெளியு மாற்றலையும் அவர்கட்கு நாட்டாது அவர்களது உயிர்க் குணத்தையும் ஒழிவு காட்டித் தத்தளிக்காது நின்று அநாதி மயலையும் வினையையும் மாயையையும் காட்டி விளக்குவது சிவநெறி யென்க.

மேலும் இத்தகை "மாயையின் வயிற்றுள் மன்னி" "வேடரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்கும், மன்னவன்றன் மகன்" போன்ற உயிரை "பின்னவனும் என் மகன் நீ என்று அவரிற் பிரித்துப் பெருமை யொடுந் தானாக்கிப் பேணுமாபோல்" ஐம்புல வேடர் சூழலினின்றும் நீக்கி "அருட் குருவாகி, மலமகற்றி, தானாக்கி, மலரடிக் கீழ்" இறைவனே வைப்பன் என்ற உண்மை கூறுவது எம் சிவநெறி யன்றோ. என்னை? இறைவனே ஆணவம் என்னும் ஒருமல முடைய விஞ்ஞானகலர்க்கு உயிர்க்குயிராய் நின்றும்; ஆணவ கன்மமாகிய இருமலமுடைய பிரளயாகலர்க்கு "மான்மழு சதுர்ப்புஜ" முதல்கூடிய திருக்கோலத்தினின்றும், ஆணவ கன்ம மாயை யாகிய மும்மல முடைய சகலராகிய எம்மனோர்க்கு "மானைக் காட்டி மான்பிடிப்பவர்போல்" மானுடச் சட்டை சாத்திக் குரு வடிவில் வந்து முற்காட்டிய சஞ்சித வினையைத் திருநோக்கா னெரித்து, ஆகாமியத்தை அறிவால் விளையாது நிறுத்திப் பிராரத்துவத்தை உடற் கழிவினழிய விட்டு இருவினை யொப்பக் கண்டு மலம் பரிபாகமாகச் சத்திநிபாதஞ் செய்து முத்தி யளித்தலாகும் தீக்கையைச் செய்தருளுவன் என்றது விளக்

கியது ஈங்குத்தானே. ஓடும் பொன்னும் ஒப்ப நோக்கி, "தேச மிடங் காலந் திக்காசனங்களின்றிச் செய்வதொன்று போற் செய்யாச் செயலதனைக் கொண்டிங்கு, ஊசல்படுமனமின்றி உலாவல் நிற்றல் உறக்கம் உணர்வு உண்டி பட்டினி யிருத்தல் கிடத்தல், மாசதனிற் றாய்மையினில் வறுமை வாழ்வில் வருத் தத்தில் திருத்தத்தில் மைதுனத்தில் சினத்தில் ஆசையினில் வெறுப்பின் இவையல்லாது மெல்லாமடைந்தாலும் ஞானிகடாம் அரனடியை அகலார்" என்றவாறு எல்லாம் "இறைவன் திருவிளை யாட்டாகவே செய்து கண்டு இன்புற்று நம் செயல் அற்று, இந்த நாம் அற்றபின், நாதன் தன் செயல்தானே, என்று உந்தீ பற" என்றவாறு நிற்றலே இருவினை யொப்பாக, அப்போது மலம் (மேலும் பிறவியிற் படுத்தும் கன்ம விளைவின்மையாற், பரிபாகமாக, மாயையாய் நின்று மயக்கிய திருவருட்சத்தியே தோழியாய் நின்று இறைவனுடன் நள்ளிருளிற் கூட்டுவித்த லாகும் சத்திநிபாதம் ஆக முன் விளக்கிய அத்துவித இன்பம் பெறுதலே முத்தியாமெனத் தெள்ளிது விளக்கியது சிவநெறியி னன்றே. வினைமுற்ற லிப்பாவ மன்னிப்பினும் மனந்திரும்பலி னும் அன்றிக் கொள்வன விற்பன முறையிலாம் வியாபாரத்தி னும் வரும் எனக் கூறும் பிறர்போலன்றி முத்தி வரவும் முத்தி யியல்பும் முத்திப்பேறும் காட்டியுள்ள செம்நெறி சிவநெறி யென்க.

மேலும் இறைவனை வணங்கி உய்வதற்கு ஒரு சாரார் கூறு வது போல் உருவில்லாத அருவமே ஒக்கு மென்றும், அன்று உருவமே ஒக்குமென்றும் வழக்கிடாது, அறிவு முதிர்ச்சிக் கேற்ப உருவாயும் அருவுருவாயும் அருவாயும் வழிபடல் பொருந்து மெனக் காட்டி நிற்பது சிவநெறி யொன்றே யன்றோ. என்னை? சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு திருமேனியும் ஆண் பெண் எனப் பிரித்தறியப்படாத அஃறிணை (Neuter) மாத்திரையிற் காட்டிய அருவமாகவும்; சதாசிவன் என்ற சிவ லிங்க வடிவமாகிப் பீடமாகிய சத்தியும் (Kinetic energy) லிங்கமாகிய சிவமும் (Potential energy) சேர்ந்து உரு

வென்பார்க்கு உருவும் அருவென்பார்க்கு அருவும் ஆகிக் குறி யளவானே (mere form) இலங்கும் திருமேனியே அருவுருவ மாகவும்; மகேசன், உருத்திரன், மால், அயன் என உரு, குணம், குறி, தொழிலாலும் சுட்டிக் காட்டிய நான்கும் ஆண்பேதமாய் முறையே மகேசை, உமை, திரு, வாணி என்னும் சத்திகளைப் பெண்ணாகக் கொண்டு உலகியலினும் எம்மனோரால் இலகுவாக வழிபடற் குற்ற திருமேனியே உருவமாகவும் குறித்துக் காட்டிய பெருமை சிவநெறியதன்றே. இதுபற்றித்தானே.

> "சத்தியும் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்
> ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக
> வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
> இத்தையும் உணரார் பீட லிங்கத்தி னியல்புமோரார்"

எனச் சித்தியாருட் கூறியதுமாம். இதை நுணுகி யுணராதார், சிவலிங்க வழிபாட்டின் திட்பநுட்பத்தைத் தெளியாதும், தெளிந்தறியாதும், அறிந்தார் வாய்க் கேட்காதும், எள்ளுவர். இவர் தமக்கு "உலகமெல்லாம்" எத்தகைத் தெனவும், எவ்வா றியங்குவதெனவும் கடாவி, ஆண் பெண் பாற்படு மியல்பு குணகுணியாய் ஒத்து ஒவ்வா நிலையில் ஒன்ற றொன்று அபின்ன மாய் "சிவஞ்சத்தி தன்னை யீன்றும், சத்திதான் சிவத்தை யீன்றும், உவந்திருவரும் புணர்ந்திங்குலகுயிர் தம்மை யீன்றும், பவன் பிரமசாரியாவன், பான்மொழி கன்னியாகும்" என்ற நிலையிற் காணக் கிடந்ததெனக் காட்டி "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்" என்பதை மறித்து மறித்து ஊன்றி நோக்கி யுணர்ந்து உண்மை கடைப்பிடிக்குமாறு தூண்டிப் பீடலிங்கத்தி னியல்பை ஓர்ந்துணர்ந்து மனத்துட் பதித்து உய்யுமாறு வேண்டி நிற்பதே யன்றி வேறென் செய்யவல்லேம்.

மேலும் உருவ வணக்கங்களுள்ளும் ஓங்கார பிரணவத்தை உருவமாக்கி "அகரமென நிறைவாகி" உகர மகரங்கள் சேர்ந்த பதி பசு பாச அமைப்பும் படைப்புக் காப்பு அழிப்பும் தேற்றிய வேழமுகத்துப் பிள்ளையார் வடிவினில் மூலாதாரப் பொருளாகக் காட்டியும் ; அறுகோண சோதியாகும் முருகென்னும் இள

நலத்திறையைப் புருவ மத்தியாகிய ஆஞ்ஞையில் கோலமயிற் றோகையுட் குலவித் தோன்றி மறைந்து, சுடர் வடிவேலேந்திக் கோழியாகும் நாதத்துட் குரலெழுப்பி இச்சை கிரியையாகும் அரமகள் குறமகளேக் கூடி ஆணவச் சூரையும் கன்மச் சிங்கத்தையும் மாயைக் கிரவுஞ்ச தாருகனேயும் முறையே அடக்கி யாண்டும், அழிய அடித்தும், தகரப் பொடித்தும் தமிழின நலந் தந்து நிற்கும், குமரனை நுண்ணிதிற் குறித்தும்; பிற ஆதாரங் களிற் பிற மூர்த்திகளாகவும் இறைவனே உண்ணோக்கிற்கும் புற நோக்கிற்கு முவப்ப உருவகப்படுத்திக் காண்பித்தும்; தகர வித்தை யென்னும் ஐந்தொழில் நிகழ்ச்சி யுருவமாக "உலகமே யுருவமாக யோனிக ளுறுப்பதாக, இலகுபே ரிச்சா ஞானக் கிரியை யுபகரணமாக, அலகிலா வுயிர்கட்கெல்லா மறிவினை யாக்கி யைந்து, நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன்" என்றபடி கூத்தப் பெருமான் (நடராஜர்) ஆக "மன்றுள் வெளி காட்டும்" கடவுளாக இருதய மென்னும் (heart) உயிர்த்தானத்தில் ஆடக்காட்டியும் விளக்கியுள்ளது சிவ நெறியன்றோ. இவை விரிப்பிற் பெருகும். வேண்டியவர் சிவ நூல்களிற் றெளிக. இதனை யறியு மாற்றலிலாதார், பல தெய்வ வணக்க முடையர் சைவர் என்ப. அவர் கூற்று முப்பான் முக்கோடி தேவர் சாதியைக் கடவுளரெனக் கொண்டாரென மேனுட்டு அறிவிலிகள் கூறிய பொய்ம்மொழியோடும், கல்லையும் செம்பையும் வணங்குவர் எனக் கூறும் நுண்ணறிவினரென்பார் சிலர் கூற்றோடும், சாதிகற்பித்தான், புராணம் எழுதினுன், ஒன்றும் மெய்யன்று, உருவும் வேண்டிற்றன்று, என நின்று போம் வழியறியா துழலும் குடியரசுக் காரரின் கொடு மொழிகளோடும் சேர்த்துச் சிவநெறி யுண்மையாந் தீயிற் சுடப்பட்டுத் திருவெண்ணீறெனத் தூளாயழியு மெனவும் அந் நீற்றையு மணிவன் அவ்விறையே யெனவுங்கூறி அன்பினி லவர்கட் கருணெறியாமாறு திருவருளை வேண்டி நிற்றலே சாலும் என விடுப்பல்.

மேலும் உருவவணக்கத்திற்கு நிறுவிய ஆலய அமைப்பி

னும் உடம்பினுயிரிருக்கு முறையாக ஆறுதார நிலையே தெளித்து "இலங்கும் உயிர் உடல்களெல்லாம் ஈசன் கோயில்" எனக்காட்டியும், வணக்க முறைகளினும் குளிப்பு நீறிடல் மணி யணிதல் ஐயுறுப்பு எண்ணுறுப்பு முற்றுறுப்புத்தோய வணக்கம் (பஞ்சாங்க, அஷ்டாங்க, சாஷ்டாங்க நமஸ்காரங்கள்) செய்தல் புலனொடுக்கியிருத்தல் (தியானம் முதலிய புற ஒழுக்கங்களாலும் அகத்தோடு உடலையும் தூய்மை யாக்கும் சுகாதார தேகாப்பியாசங்களையும், நறுமணங்களையும், கர்ப்பூரமாதி தூயொளி விளக்குகளையும் பஞ்சகவ்விய மெனனும் ஆனைந்தாகும் அருமருந்தினையும் குறித்துள்ளது சிவநெறியன்றே. இறைவர் காட்டிய நீர் (மஞ்சனதீர்த்தம்) கோசல கோமயம் ஆதியவற்றின் பெருமையும் அருமையும் இப்போது ஐரோப்பிய அறிஞரும் பெரிதும் உணர்ந்து போற்றுவதாகச் சென்ற வாரப்பத்திரிகை யொன்றினும் கண்டாம். சுருங்கச்சொல்லில் யாம் செய்யும் எச்செயலும், நினைக்கும் எந்நினைவும் சொல்லும் எச்சொல்லும் இறை வணக்கமாக "நின்று மிருந்துங்கிடந்து நடந்து நினை, என்றும் சிவன் றுளினை" எனக்காட்டியுளது சிவநெறியேயாம். ஏனைய மதங்களிற்போல் வாரமொரு முறையோ, அன்றி நாளில் சில பொழுதுகளிலோ இறைவனை நினைப்பதும் எஞ்சிய நேரங்களில் இறைவனையின்றிப் பிற செயல்களிலீடுபட்டுழைப்பதும் என்றில்லாமல் "எல்லாம் உன் செய்கையே" என அவனில் ஒன்றி நின்றகலாது உயிர் வாழக் காட்டுவது சிவநெறி யொன்றே யெனல் மிகையாகாது.

மேலுமிவ் வொழுக்க நெறி விளக்கவுற்றுச் சிலரால் கால தேச வர்த்தமானங்களுக்கேற்க வகுத்து விதித்தவற்றையும் பலரால் (majority) கொண்டாடப்படுவன வற்றையும் நன்மையென்றும் விலக்கியனவற்றையும் வெறுக்கப்படுவன வற்றையும் தீமையென்றும் சுட்டாது "இதம் அகிதங்களென்பது இகல் மனம் வாக்குக்காயத்த, இதம் உயிர்க்கு உறுதி செய்தல் அகிதம் மற்றது செய்யாமை" எனச் செய்யப்பட்டார்க்கு உறுதிபயப்பன இதம் (நன்மை) ஆகவும், உறுதிபயவாதன அகிதம்

(தீமை) ஆகவும் வரை விலக்கணம் காட்டியுள்ளது சிவநெறியினன்றே. இதுவும் சிவநெறியினைக் காலதேச வர்த்தமானங்களுட் கட்டுப்படாத உலகநெறி எனக்காட்டுமன்றே. இது பற்றியே "ஈனமில் செய்தி ஈசனிடும் பணி" எனவும் "ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம், வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை, அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி, இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்" எனவும் "அறமலி இதம், மறமலி அகிதம்" எனவும் "சினமுதலகற்றி வாழும் செயல் அறமானால்" எனவும் சித்தியாரில் விடுத்து விடுத்துக் கூறியதுமாம் என்க. என்னை? இயற்கை நோக்கி, இயல்பு நோக்கி, பழக்க நோக்கி, பாவனை நோக்கி செயப்பட்டார்க்கிடருழையாதன நலனும், இடருழப்பன தீதும் ஆமென்ப. இதுவே மேதாவியரும் ஒப்பக் கொள்ளும் உண்மையாம். செய்பவன் தன் செயலற்று "ஏகனாகி இறைபணி நிற்ப" செயப்பட்டாற்குறும் பயனுகரவே செயலின் நயன் தீது தெரிக்கும் கட்டளைக் கல்லாதல் தெளிவு. இதனைச் சுட்டியே திருவள்ளுவ நாயனாரும் "வாய்மை எனப்படுவதியாதெனின் யார் யார்க்கும் தீமையிலாத சொலல்" என்றதும் "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன், ஆகுல நீரபிற" என்றதுமாம். என்னை மனத்து மாசிலதாக வாக்கில் மாசின்றும், செயலினும் இன்றும் என்றபடி. அன்றி ஏனைய மதத்தர்போல் உலகியற் கட்டளையும், அரசாங்கக்கட்டளையும், பலர் கட்டிய கட்டளையும், மனச்சாட்சியென்ற, என்றும் காலதேச வர்த்தமான இயல்பில் மாறித் தோன்றும் பொருளலாப் பொருளின் கட்டளையும் இதம் அகித வரைவிலக்கணத்தை நிறுவகில்லா தென்பது காட்டித் தெளிவுறுத்தியது சிவநெறியிலேயாம் எனல் ஒப்பாம்.

மேலும் இறவாப்பேரின்ப முத்தியுட்டிளைக்கும் தன்மையை, உலகிற் சிறந்த இல்லொழுக்க வாழ்க்கையிற் கண்ட போலி இன்பத்து மேலுண்மையாகக் காண்பித்து, அழியாவின்பத்துட்டிளைத்து அரனோடொன்றி இரண்டன்றி ஒன்று மன்றி அத்து

விதமாய்க் கலந்து நின்று துய்த்தல் என்பதாகக்காட்ட "அவ னே தானே ஆகிய அந்நெறி, ஏகனுகி இறைபணி நிற்க, மல மாயை தன்னொடு வல்வினையின்றே" எனக்குறித்து விளக்கி உலகியலிலும் முருகன் வள்ளி யொழுக்கிலும் பிறபுராண சரித் திரங்களினும் சிறப்பித்து நிற்பது சிவநெறியன்றே. இவற்றை யறியாதார் புராணங்களை இழித்துக் கூறுவர். நால்வகை நெறியா ர்க்கும் உண்மையைப் பருப்பொருளாகவும் உட்பொருளாகவும் தெளிபொருளாகவும், துய்பொருளாகவும் உணர உவமை முறை யில் நிகழ்ச்சிகளை யொட்டி யெழுந்த மெய்ஞ்ஞான நூல்களவை யென்பதும், துருவியாய ஆய அகத்துப் பிரித்துணர மெய் யமுது எழும் என்பதும் உணராதார் வெளிற்றுரையாய் அவர் கூற்று ஒழியும் ஆக இவர்க்கு.

"அப்பணி செஞ்சடை ஆதிபராபரன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பன மும்மல காரியம்
அப்புரம் செற்றமை ஆர் அறிவாரே"

என்ற திருமந்திரத்தைக் காட்டித் திரிபுர தகனம் மும்மலகா ரியவழிவு குறித்த இறையருட் செயலாகவும், பாற்கடற் கடைவு பிராணுயாமத்துக் குண்டலி யெழுப்பி அமுதூறச் செய்து தேவராய் அழியா வின்பம் பெறலும் தவறி யசுரராய்க் கழிகாமத்தழிதலும் குறித்த பெரும் பொருட் புதை செயலாக வும், காலனைக் காலாலுதைத்தது ஆயுளடக்கத்தை யோக சாதனையாற் காலை (பிராண வாயுவை) நிலைசெய்து எண்ணும் பதினுறிற் கட்டி நீட்டிப்பது குறித்த தெளி செயலாகவும், சூர சம்மாரம் இருள்மாவாகும் ஆணவச் சூரைச் செயலறச் செய்து மயில் சேவலாகும் பரவிந்து நாதத் தொடுக்கி, வெட்ட வெட்டத் தழைக்கும் பல் ஆயிர முகமுடைச் சிங்கமாகும் கன்மத்தை (வைராக்கியம்) ஓர்ப்பு என்னும் வச்சிரத்தாலழிவுபட வடித்து, அறிவுடைப் பொருள் அறிவில் பொருள் (சராசரம்) ஆகிய தார கன் கிரௌஞ்சமென நின்ற மாயையை வேலாற் றுளைத்து அறி வொளிப் பிழம்பிற்று கழிபடத் தீத்தும் முத்தி முத்தற் கீந்த

திருவருட் செயலாகவும் காண நின்ற உண்மையை நுணுகியா ராயுமாறு வேண்டிப் பிறகலைகளும் இவ்வாறே அறியக் கிடக் கும் என வலியுறுத்திப் பெரும் பொருள் பொதிந்த அருங் களஞ்சியமே புராண இதிகாசம் ஆகும் எனக் கூறி விடுப்பல்.

மேலும் "தர்மம் குறைந்து அதர்மம் பெருக நானே மீட் டும் மீட்டும் உருவெடுப்பேன்" எனக் கிருஷ்ணபரமாத்மா கீதையிற் கூறியவாறு, வேண்டிய வேண்டிய காலத்தில் உலகி லுண்மைநாட்டு அவதார புருடர்களாம் இறையருட் செல்வர் களைத் தந்து வருவதும் இறையருளே எனக்காட்டி, ஏனைய மதத் தர்போல ஒரு அவதாரத்திலேயே திருவருட்கு முடிவு காட் டாது நிலவுவதும் சிவநெறியன்றே. இது பற்றியன்றோ எம்பரத கண்டம் புண்ணிய பூமி யெனப்படவும், இன்றும் இன்னும் மெய்யறிவாளர்களைத் தோற்றுவித்தும் தோற்றுவிக்க நின்றும் பேருலகிற் பெரும் பொருள் நோக்கிற்கு நிலைக்களனுகி, உடலி லுள்ளவாபோல் கமலை (திருவாரூர்) ஆகும் மூலத்தில், உயிர்ச் சத்தியைப் பிறப்பிக்க முத்தியும், காசியாகும் புருவ நடுவிற் சுட்டெரிக்க முத்தியும், பேரம்பலமாகும் இதயத்திற்காண நிறுத்த முத்தியும் தருங்குறிப்புடைத்தாய் நிலவவும் பெற்றது என்ப.

மேலும் அன்புநெறி, அருள் விழைவு என்பனவற்றை நன்கு விளக்கி, உலகினில் எப்பொருட்கு மியக்க மிருக்கு மாற் ருனே சிவசத்திபதிவாக உயிருண்டு என்பதைக்காட்டி மக்கள் மேலன்றி மற்றெல்லாவற்றினும் அன்பு பாராட்டி அருள்விழை வாக்குமாறு கற்பித்து மெய்யான இரக்கம் (சீவகாருண்யம்) தலைப்பெய்த கொல்லா (அஹிம்சா) நெறிபூண்ட உண்மை (சத்ய) ஒழுக்கத்தை நிலைநாட்டி யுள்ளதும் சிவநெறி தானே எனல் மறுக்கொணு மாண்பேயாம். அது பற்றியே "உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை" என்றும் "நோன்பென்பதுவே கொன்று தின்னுமை" என்றும்,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலர்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே"

என்றும் மறை மொழிகள் எழுந்ததூஉமாம் என்க. இவ்வன்பு நெறியை நாட்டி உலகிற்கு நல்வழி நிறுவிய நாயன்மார்கள் முதலிய பல்பெரும் பெரியாரது கதைகளும் அவர்களெமக்கு அருளினீந்த திருமுறைப் பாக்களும் கன்னெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் தகைத்தாதல் எம் சிவநெறிக்குப் பிறநெறிகளிற் சிறந்த பெருமையைத் தருவதோடமையாது பொருணிலை நிறுத்தலில் "அன்பே சிவமா யமர்ந்திருப்ப"ரெனமுற்றுக் கட்டி முடித்த ஒப்பிலாத்தனிமாண்பையும் நிறுத்தி நிற்பவெனல் தெளிவே. எனவே உலகியலிற் பல நெறிகளும் துன்பத்து விலக்கி இன்பத்தை, அதுவும், அழியாப் பேரின்பத்தை உயிர்கள் அடைந்துய்ய எழுந்தன என்றும், அவற்றுட் சிவநெறியே

(க) உண்டாக்கிய ஒருவர் பெயரானியங்காது துய்க்கும் பயனும் சிவத்தையிட்டு அறிய நிற்றலானும்,

(உ) முற்றின்பக் கூட்டை (பரமசுக சம்பந்தத்தை) விளக்கு நெறியென விளங்கி நிலவலானும்,

(ஙு) எல்லா நெறிகளையும் அவற்றின் முடிபுகளையும் தன்னுள் அடக்கிக் காண்பித்து, ஒன்றையும் இகழாது மேற்றிகழ்தலானும்.

(ச) பொருள்கள் இறை, உயிர், இருள் (பதி பசு பாசம்) என மூன்றாய் முதலீறின்றி (அநாதியாக) நிலைப்பன என விளக்குதலானும்,

(ரு) ஆண் பெண் (சத்த சத்தி பேதம்) ஆகிய தன்மையை இறைவனிற் காட்டிப் பெண்மையை எள்ளாது உயர்த்தி நாட்டுதலானும்,

(சா) ஆண்டானடிமை, தந்தை மகன், தோழன் றோழி, தலைவன் றலைவியர், (தாதமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம்) என்ற முறைகளில் இறை வணக்

கத்தை இயல்புக்கும் தகுதிக்கு மேற்ப உலகினர்க்கு வகுத்துக் காட்டலானும்,

(௭) இருள், வினை, மயக்கு (ஆணவம், கன்மம், மாயை) என்னும் கட்டு (பாசம்)களின் தன்மையை விரித்து விளக்கி உயிர்க்குள்ள குறையைக் காட்டலானும்.

(அ) அக்குறையை மாற்றும் அருட்பதிவு (தீக்கை) முறையையும் இறைவனே அருட் குருவாய் வந்து ஆட்கொள்ளும் திறனையும் தெளிய விளக்குதலானும்.

(௯) அவரவர் அறிவு ஆற்றலுக்கேற்ப அருவ, அருவுருவ, உருவத்திருமேனிகளை இறைவற்குளதாகக் காண்பித்தலானும்.

(௰) உருவ வணக்கத்தும் இயற்கை வணக்கமாகிய முருக வணக்கம் பிள்ளையார் வணக்கம் முதலியவற்றை உட்பொருள் உணர வைத்து நன்கு நிறுத்துதலானும்.

(௰க) திருக்கோயில் அமைப்பு, நாட்செயல் (நித்தியகருமம்) வணக்கங்களினும் உடல் மனந்தூய்மையுற ஒழுக்க நிறுவி, நினைவு பேச்சு செயல் எல்லாம் இறை வணக்கமாம் கடமையே யெனக் காட்டுதலானும்.

(௰உ) நல்லொழுக்கமுமே "உயிர்க்குறுதி செய்தல்" என்றும், தீயொழுக்கம் "உயிர்க்கு உறுதி செய்யாமை" என்றும் வரைவுசெய்து, செயப்பட்டார் பாற்கண்ட இன்ப துன்பமாகிய உணர்ச்சிப்பயனே கட்டளைக்கல்லா நிற்குமெனத் தெளிவுறுத் தலானும்.

(௰௩) ஒன்றிரண்டற்ற (அத்துவித) முத்தி நிலையை உலகியலில் இல்லொழுக்க வின்பத்தோ டொருபுடை இணைத்து மேற் செலச் சுட்டுதலானும்.

(௰௪) பெரியோர் பிறப்பு (அவதாரம்) என்றென்றைக்கும் ஆகும் என்பதை வற்புறுத்தலானும்.

(௰௫) அன்பு நெறியே மெய்ந்நெறியெனக் காட்டி அன்பே சிவம் என முடித்து உண்மை அறிவு இன்பம் (சச்சிதாநந்தம்)

என்பதை உலகினர்க்குத் தெளிய விளக்கி அருள் நிலை குறித் தலானும்.

எம்சிவநெறியே மேலான மாண்புடையதாமென இது காறும் கூறியுற்றதாம். மேல் விரிவுதெரிய வேண்டுவோர் சிவஞான போதம, சிவஞான சித்தியார் முதலிய கச மெய் கண்ட சாத்திரங்களை ஆராய்ந்து திருக்குறள் பண்டார சாத்தி ரம் தொண்டர் புராணம் திருமுறைகள் முதலிய தமிழ் நூல் களோ டொட்டி நுணுகத்தேர்ந்து அறிந்தார் மாட்டு ஐயந் தீர்த்து அமைவதாக அதினும் சிவஞான சித்தியார் திருவிளங்க தீபிகை என்னும் புத்துரையில் இக்கூறிய பலவுண்மைகளும் பரக்கத்தெரித்திருத்தல் பார்த்துணர்க.

குற்றங்குறைகளைக் களைந்து குணமே கொள்ளல் கற்றோர் கடமையெனவும், சொற்றவற்றை முற்று மாய்ந்து துணிபு கோடல் கற்போர் கடமையெனவும் கூறி இறை அருள் இலங்க இலங்கைப்பண்டை அரசியல் நகரில் இன்று கூடி இச்சிற்றுரை யையும் கேட்க இயைந்து இழுத்து இங்கு இவனையும் பொருட் படுத்திய இளஞ்சிங்கங்களாகும் சிவநெறிச் செல்வ உடன் பிறப் பாளர்கட்கு இறை நலனே கண்டு இணக்கமாகிய வணக்கமு மீந்து நிலைக்கின்றேன்.

"சிவனெனு நாமந் தனக்கேஉடைய செம்மேனி யெம்மான்
அவனெனை ஆட்கொண் டளித்திடு மாயில் அவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்நிற்பனே"

"நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன்அடி யேனையும் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே"

"இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவா கித்திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கதையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே"

அம்மை அப்பன் திருவடிகள் வாழ்க.

தமிழ்ச் சித்த வைத்தியம்

(ஸ்ரீமத் விருதை சிவஞான யோகிகள்)

(256-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச் சித்த வைத்தியம் முற்றறிஞனாகிய சிவனார் ஏழிலக்கம் பாட்டுக்களுடையதாய் இயற்றியருளிய தமிழ்ச் சித்த வைத்திய முதல் நூலையும், முருகன் முதலிய கணநாதரும் சித்தரும் முனிவரும் கூறிய வழிநூல் சார்பு நூல்களையும் மேற்கோள்களாக வுடையது. சிவனார்பாற் கேட்டவர் நந்தி. அவர் பாற் கேட்டோர் சனகாதி முனிவர் எண்மர். அவர் வழிவந்த சித்தர் பலர். சனகாதி முனிவர் தமிழ் முதற்சங்க காலமாகிய இற்றைக்குப் பதினாறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவர். அன்னவர் கூறிய தமிழ்ச் சித்த வைத்திய நூல்களிற் பல அக்காலந் துவக்கி வழங்கிவருகின்றன. சித்த வைத்திய நூல்களில் மக்களுறை மூலிகை சம்பந்தப்பட்ட மருந்து, சூருறை அறுவையும் அதற்குரிய மருந்துகளும், தேவுறை நீறு (பற்பம்) செந்தூரம், சுன்னம், உலோகம், பாடாணம், சத்து மணி முதலியன ஆகிய மூவகை மருந்துகளும் உலோகங்களைத் தூயனவாக்கி மாற்றும் வாத சம்பந்த மருந்துகளும், உடலை வலுக்கச் செய்து ஆயுளை நீளச் செய்யும் காய கற்ப மருந்துகளும், இவற்றிற்குக் குருவாகிய முப்பு முறைகளும், உயிரை நிலைப்படுத்தக் கூடிய யோக முறைகளும் கூறப்பட்டுள்ளன. ஆகவே தமிழ்ச் சித்த நூல்களில் மக்கட்கு இன்றியமையாத வெல்லா உயர் மருந்து முறைகளும், சாதாரண முறைகளும் நிரம்பியுள்ளன வென்பது தெளிவு.

காசியரசன் மகனாராகிய திவோதாசன் என்பவர் வைத்திய நூற்றேர்ச்சியால் "தன் வந்திரி" என்ற பட்டப் பெயர் அடைந்தனர். அவர் காலம் இற்றைக்கு 1500 ஆண்டுகளாகின்றன. சரகர் காலம் அதற்கு முந்தினதாதலால் கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னரே வடமொழி ஆயுள் வேதம்

என்னும் வைத்திய நூல்கள் தோன்றின. வடமொழி அட்டாங்க இருதயம் கி. பி. 900 லும், சாரங்கதர சங்கிதை கி. பி. 1300 லும், பாவப்பிரகாசம் 1600 லும் தோன்றின. சுசுருதரும் தந்வந்திரியார் காலத்தவரே. 1. நாடி, 2, கண், 3. நா, 4. உடல், 5. மலம், 6, நீர், 7. தொடல் (பரிசம்), 8. ஒலி என்ற இவற்றால் நோய்களையறியும் எண் வகைத்தேர்வுகளும், தேவுறையாகிய உலோகம், பாடாணம், சத்து, முதலியவற்றின் பற்பம், செந்தூரம், சுன்னம் முதலியவைகளும் வடமொழிச் சரகம் சுசுருதம் என்ற நூல்களில் கூறப்படவில்லை. மக்களுறை, சூருறைகள் மட்டும் அவற்றில் கூறப்பட்டுள்ளன.

வடமொழி ஆயுள்வேத மருந்துகள். 1. குடிநீர்வகை 12, 2. சூரணம், 3 வடிகா, (குளிகை), 4. மோதகம் (உண்டை), 5. கண்டபாகம் (லேகியம்), 6. பாவனம், 7. புடபாகம், 8. காஞ்சிகம் (புளிப்புப்பானம்), 9. திராவகம், 10. சொற்ப திராவகம். 11. சங்கதிராவகம், 12. ஆசவம் (காய்ச்சாத செயற்கள்), 13. அரிட்டம் (காய்ச்சிய செயற்கள்), 14. கிருதம் (நெய்), 15. தைலம், 16. வமனம், (வாந்தி), 17. விரோசனம் அல்லது பேதி, 18. வஸ்தி (பீச்சுமருந்து), 19. நசியம் (மூக்குறை), 20. தூமபானம் (புகை குடித்தல்), 21. கண்டூசம் (கொப்பளி மருந்து) முதலியனவே.

ஆயுள்வேத நூல்களில் சரகர், சுசுருதர், வாக்படர், மாதவகரர் இவர்கள் நாடியில் நோயறியும் விதத்தைச் சொல்லவில்லை. கி. பி. 1300 ல் தோன்றிய சாரங்கதரர் தான் முதலில் வடமொழியில் நாடிபார்க்கும் விதத்தைத் தமிழினின் றெடுத்தெழுதினர். பல சித்த மருந்துகளையும் மொழிபெயர்த் தெழுதினர்.

சித்த வைத்திய மருந்துகள் 66 வகைப்பட்டு ஒவ்வொன்றிலும் ஆயிரக் கணக்கான முறைகளிருக்கின்றன. அன்றியும் மிக்க வலியுடையனவும் தீராத நோய்களைத் தீர்ப்பனவுமாகிய மருந்துகள் பல ஆயிரக்கணக்கிலுள்ளன.

பிற்காலத்தவரான ஆதிமன், நித்திய நாதன், சந்திரசேனன், சோமதேவன், கோவிந்தன், நாகார்ச்சுனன் முதலியவர்

தமிழ்ச் சித்த முறைகளைத் தெரிந்து சில நூல்களெழுதினார். இரசரத்தின சமுச்சயமென்ற நூலும் பின்னாலெழுதப்பட்டது.

ஆந்திரத்தில் கி. பி. 19-வது நூற்றாண்டில் நவநாத சித்த தீபிகை, சரபராஜீயம் என்ற நூல்கள் தமிழ்ச்சித்த முறைகள் பல தேர்ந்தெழுதப்பட்டுள்ளன.

கிரீக்தேச வைத்திய நூல்கள் கி. மு. 900 லும், ஆலோபாதி (எதிருறை) என்ற ஆங்கில வைத்தியம் கி. பி. 1755 லும், உரோமர் மருத்துவம் கி. பி. 200 லும், ஓமியோபாதி (ஒப்புறை) கி. பி. 1753 லும், யூநாநி மருத்துவம் கி. பி. 600 லும் தோன்றின.

திவான் பகதூர் L. D. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் M.A., B.L., L.L.B., I.S.O. தமிழ் வைத்தியசங்க இரண்டாவது மகா நாட்டுத் தலைவராய்ச் செய்த பிரசங்கத்தில் "ஜயினர், பௌத்தர், கிரேக்கர், உரோமர் நூல்களைக் காட்டிலும், நம் மருத்துவ நூல் முந்தியதெனக்கருத இடமுண்டு."

"நாம் கையாடிய நூல்களெல்லா வற்றிலும் இம்மருத்துவ நூலிலேயே பிறருதவியின்றி மிகவுழைத்திருக்கிறோம்" மருத்துவத்திலோ வென்றால் நாம் மற்ற நாடுகளிலிருந்து கைக்கொண்டது மிகவுங் கொஞ்சம், நாமேயுண்டு பண்ணியதும் மற்றவர்களுக்குப் பகுத் துரைத்ததும் அதிகம் என்றும், "பிரெஞ்சுக்காரரான குருமாரிடத்தில் ஒரு மருந்துப் புத்தகமுண்டு. அதில் இந்நாட்டு மருந்துகள் பெரும்பான்மையும், மேல் நாட்டு மருந்துகள் சிறுபான்மையுமாக விருப்பது மன்றி மேல் நாட்டு மருந்துச்சாலைகளும், மருத்துவர்களும் இல்லாத விடங்களிலெங்கும் விளையும் மூலிகைகளைக் கொண்டு நோய்களைப் போக்கும் பொருட்டுப் பல விதிகளும், வாகடங்களும் அடங்கியிருக்கின்றன. இவ்விதமான மருத்துவத்தை மேல் நாட்டாரான சில பிரஞ்சுக்காரர் கைப்பற்றி யிருப்பாரானால் இப்பரதகண்டமாகிய நம் நாட்டில் வந்து வசிக்கும் மேல் நாட்டவரும் சில காரணங்களால் மேல் நாட்டு மருத்துவத்தை நாடும் நமதுநாட்ட

வரும் நம் மருத்துவத்தை யேற்றுக் கொள்வதற்குத் தடை யென்ன! முடிவாய் நான் கூறுவதெல்லாம் நம் தமிழ் வைத்தியத் திலுள்ள அரிய மருந்துகளனைத்தும் உலகிலுள்ள எல்லா நாட்ட வருக்கும் பயன்படும்படி செய்யும் முயற்சியே சிறந்த தென் பதே" என்றும் விளக்கியிருக்கிறார்.

எல்பின்ஸ்டன் என்ற ஆங்கில வைத்தியாசிரியர் இந்துக் கள் தான் முதன் முதல் உலோகங்களை வைத்தியத்தில் உபயோ கப்படுத்தியவர்கள் இரசத்தையும் பாடாணத்தையும் உபயோ கப்படுத்த அவர்களிட மிருந்தே நாம் கற்றுக்கொண்டோ மென்று கூறியிருக்கிறார்.

ரோமன் கத்தோலி மதகுருவாகிய ரேவ ரேண்ட் பேஸ்சி (Rev. Beschi) என்பவர் தமிழ்மொழியையும் தமிழ் வைத்திய நூல்களையும் நன்குணர்ந்தோதி "தேம்பாவணி" என்ற தமிழ் காவிய மொன்றும் வேறு சில நூல்களுமெழுதியதன்றிச் சித்தவைத்திய முறைகளை விளக்கும் பொருட்டு நசகாண்ட முதலிய தமிழ் வைத்திய நூல்களு மெழுதியிருக்கிறார். அவா சித்த மார்க்கங் களைத் தேர்ந்து ஆயுளையும் வளர்த்துச் சமாதி யடைந்தார்.

80 வருஷங்களுக்கு முன் ஈஸ்ட் இண்டியாக் கம்பெனியி லிருந்த ஒரு ஆங்கில டாக்டர் தமிழ் அகஸ்தியர் பரிபூரணம் நானூறு முதலிய பல நூல்களிலிருந்து மொழி பெயர்த்து ஆங் கிலத்திலெழுதி அச்சிட்ட இரண்டு வால்யுமாகிய தமிழ் வைத்திய புத்தகம் சென்னை கவர்ன்மென்ட் கன்னிமாரா லைப்ரெரியில் இன்றும் காணலாம். இன்னும் இதைப்பற்றி ஆராய்ச்சி செய் யில் உலகத்திலுள்ள எல்லாத் தேச வைத்தியர்களும் தமிழ்ச்சித்த நூல்களிலிருந்தும் சித்த முறைகளைத் தெரிந்தவர்களிட மிருந் தும் லோகம், பாடாணங்களின் பற்ப செந்தூரங்களின் முறை களைத் தெரிந்து கொண்டார்களென்று கருதற்குப் பலகாரணங் களிருக்கின்றன.

சித்தவைத்தியத்தில் மருந்துகளுக்கும் நோய்களுக்கும் உள்ள இயைபுகளை விளக்கும் பொருட்டு திருமந்திரம் 8000-ல்

இவைபுகள் எதிருறை (Alopathy), ஒப்புறை (Homeopathy), கலப்புறை என மூன்று விதங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து"

என்ற திருக்குறட்படி நோயாளன், மருத்துவன், மருந்து, உழைச்செல்வான் என நாலு உறுப்புகளைத் தமிழ்ச்சித்த வைத்திய நூல்கள் கூறல், தற்காலமுள்ள ஆங்கில முறையை ஒத்திருக்கிறது.

"நோய்நாடி நோய்முத னாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (திருக்குறள்)

என்று நோயை ஆராய்ந்து அதற்குக் காரணத்தை யாராய்ந்து அக்காரணத்தைத் தணிக்கும் வழியை யாராய்ந்து அது நிறைவேறச் செய்தல் மருந்து என்று நோயின் காரணத்தை விலக்கலால் நோய் நீங்குமென்று விளக்கப்படுகிறது.

நோய்க்குக் காரணங்கள்.

உணவு, ஒழுக்கம், உயிர்த்தல், உழைப்புகளின் வேற்றுமை, புழுக்கள், கெட்ட வாயுக்கள் உட்செல்லல் முதலிய வற்றோடு சித்தர் நூல்களிற் கூறும் முக்கிய காரணங்கள் வாத பித்த கவங்களின் விகாரங்கள், 1. உயிர்க்கால் (பிராணவாயு), 2. ஒலிக்கால் (உதானவாயு), 3. செயற் கால் (வியானவாயு), 4. செரிகால் (சமானவாயு), 5. மலக்கால் (அபானவாயு), முதலிய வாயுக்களின் விகாரங்கள், 1. சாறம் (இரசம்), 2. செந்நீர் (இரத்தம்), 3 ஊன் (மாம்சம்), 4. கொழுப்பு (மேதசு), 5. என்பு (அஸ்தி), 6. மூளை (மச்சை) 7. வெண்ணீர் (சுக்கிலம்) ஆகிய தாதுக்களின் விகாரங்கள் மக்களுடலிலுள்ள உலோகங்களின் குறைவு முதலியனவும் ஆம்.

மனிதன் உடலில் இரத்தத்தில் 1. இரும்புச்சத்தும், மயிரில் 2. செம்புச்சத்தும், மூளையில் 3. தங்கச் சத்தும், எலும்புகளில் 4. வங்கச்சத்தும், நரம்புகளில் 5. வெள்ளிச் சத்தும், உயிர்ப்பில் 6. சூதச் சத்தும் இருக்கின்றன. இரத்தத்தில் இரும்புச் சத்துக் குறைந்தால் இரும்பைக் கொடுத்து நிறைக்கில் அந்நோய் நீங்கு

மென்று ஆலோபாதிக் வைத்தியர் கண்டு பிடித்துக் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் அவர் அதன் களிம்பு நீக்கி மருந்து செய்யாமையால் இரும்பு மருந்து சிலநாட் சாப்பிட்டவுடன் மலங்கறுத்துக் களிம்பு தோன்றுகிறது. அதிக நாட் கொடுத்தால் சில தீங்குகளுஞ் செய்கின்றது. சித்த முறையிற் செய்யப்பட்ட அயச் செந்தூரப் பற்பங்கள் எத்தனை நாட் சாப்பிட்டாலும் களிம்பின்மையால் மலங்கறுக்காது வேறு தீமையுஞ் செய்யாது. ஆதலால் பலநோய்களைப் போக்குதற்கு உலோகச் சத்துள்ள மருந்துகள் அவசியம் வேண்டியிருப்பதால் சித்த வைத்திய முறைப் பற்ப செந்தூரங்கள் இன்றி யமையாதனவாம். மூலிகைகளிலும் உலோகச் சத்துள்ளன விருக்கின்றன. அவற்றையும் சித்த வைத்திய நூல்களால்தான் அறியலாம். மேற்றிசையார் தங்க மருந்தால் பயனின்றென்று முற்காலத்தில் வெறுத்துக் கூறினர். இப்பொழுது பல மேற்றிசை வைத்தியர் தங்கம் இருமல் உளமாந்தை (Tuberculosiso consumption) முதலிய நோய்களைத் தீர்ப்பதாய்க் கண்டு பிடித்திருக்கின்றனர். இனிச் சிறிது காலத்தில் சித்த மருந்துகளாகிய உலோக மருந்துகளை யெல்லாம் மேற்றிசையாரும் உபயோகித்துப் பயனடைவித்தற் பொருட்டே சித்த வைத்தியக் கண்காட்சிகள் நடத்தப் படுகிறது. எகிப்து (Egypt) தேசத்திலிருந்த அரசர் பிணங்கள் ஆயிரக் கணக்கான வருடங்களுக்குக் கெடாமல் தைலம் நிறைத்து மேலிலும் பூசலால் நிலைத்திருக்கிறது எல்லாருமறிந்த விஷயம்.

தமிழ்ச் சித்தர்கள் சத்துச் செந்தூரங்களையும், கற்ப மருந்துகளையும், மகா மூலிகைகளையும் சாப்பிடுவதால் 120 வருடம் சாதாரணமா யுயிர்த்திருக்கலாம். பத்தியம் யோகப் பயிற்சியுடன் கற்ப மருந்தினால் ஆயிரக் கணக்கான வருடங்கள் உயிரோடிருக்கலாமென்று கூறியிருக்கின்றனர். நீண்ட ஆயுள் பெற்றிருந்த பெரியோர்களிற் சிலரை நான் பார்த்து மிருக்கிறேன்.

அதற்குரிய யோகப் பயிற்சியுடைய பெரியோர் சிலர் நட்பு

மெனக் குண்டு, உடல் நிலைக்கச் செய்யச் சித்த மருந்துகளும், உயிர் நிலைக்கச் செய்ய யோகப் பயிற்சியும் இன்றி யமையாதன. இந்த நம்பிக்கையும் அநுபவமும் இந்தியாவில் நீண்ட காலமா யிருந்து வருகிறது. அதை நன்கு கூறுவன தமிழ்ச் சித்த நூல்கள் தான். இந்நம்பிக்கை இந்தியர் கூட்டுறவால் மேற்றிசை யிலும் பரவுகின்றது.

இந்து நேசன் 29-1-1 927-ல் 1000 ஆயிரம் வருட காலம் எப்படிப் பிழைக்கலாம்.

ஜெர்மனியின் தலைநகராகிய பெர்லின் (Berlin) என்னும் ஊரில் ஓர் ரசாயன சாஸ்திரி டி. ஹேபர் (D. Haber) என்பவர் 1000 வருஷங்கள் வரையில் ஒருவன் உயிரோடிருக்கலா மென்கிறார். எவ்வண காலத்தில் எப்படி என்ஜிம்ஸ் (Eng Zemes) உண்டாக்கப்பட்டனவோ அப்படியே கிழத்தனத்திலும் உண்டாக்கப்பட வேண்டிய சாதகங்களைத் தேகத்திலேயே தானே யுண்டாக்கினால் மூப்பில்லாமலே போய்விடும் என்றும் சிறு வயதில் வளர்ச்சிக்குரிய அணுக்கள் தேகத்தி லுண்டாவதுபோல முதிர்ந்த வயதிலும் உண்டாகச் செய்தால்; மூப்பு வராமல் வயது வளரும் எனவும் கூறுகின்றார்.

சித்தர் நூல்களும், 42 வயது வரை உலோகச் சத்துக்களும், ஜீவாணுக்களும், மக்களுடலில் உண்ணும் உணவினின்று தோன்றி யுடல் வளர்த்தல் போல முதிர்ந்த வயதிலும் அவை தோன்றும்படி உலோகச் சத்து மருந்துகளும், சீவ சத்துண்டாக்கு மருந்துகளு முட்கொண்டு ஆயுளை நீடித்துக் கொள்ளும்படி கூறுகின்றன.

சித்தர் நூல்களைப் படித்துத் தேர்ச்சியடையும் வைத்தியப் பாடசாலைகளும், மருந்தாராய்ச்சிச் சாலையும், கற்ப ஆராய்ச்சிச் சாலையும், வைத்து நடத்துந் தருமத்தை நம் நாட்டுக் கனவான்கள் மேற்கொண்டால் கல்விகொண்ட (வித்யாதன) பலமும், மருந்து தந்து நோய்களைப் போக்குந் தருமபலனும் அடைவதோடு தாங்களும் நீண்ட ஆயுளும் கீர்த்தியும் பெறுவார்கள்.

கோவிற்பட்டி } வி. சிவஞான யோகி, அமைச்சர்,
சென்னை மாகாண சித்தவைத்தியசங்கம்.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

இறைவன் 4.

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

கடவுளைக் குறிக்கும் பண்டைத் தமிழ்ச் சொற்களில் இறைவன் என்னும் சொல் ஒன்று. இறைவன் என்ற சொல் இறு என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல். இறு என்னும் பகுதி ஐ என்னும் தொழிற் பெயர் விகுதியுடன் சேர்ந்து இறை என்றாயிற்று. பொறு, நிறு, சிறு என்ற பகுதிகளிலிருந்து முறையே பொறை நிறை சிறை என்ற சொற்கள் வந்தனபோல இறு என்ற பகுதியிலிருந்து இறை என்ற சொல் வந்தது. இறு என்ற பகுதி, தல் என்ற தொழிற் பெயர் விகுதியுடன் சேர்ந்து இறுத்தல் (இறுதல் அல்ல) என்றாதலும் உண்டு; பொறு பொறுத்தல் என்றும், நிறு நிறுத்தல் என்றும், சிறு சிறுத்தல் என்றும் வருதல்போல இறு என்பதற்கு "தங்கு" என்று பொருள். இறை என்ற சொல் தங்குதல் என்னும் தொழிலைக் குறிக்கின்றது. அது தொழில் ஆகுபெயராய்த் தங்குதலை உடையவனை அல்லது தங்குகிறவனை உணர்த்துகிறது. இறை என்ற சொல்லினால் பண்டைத் தமிழ் மக்கள் அங்கு இங்கு என்னாதபடி எங்கும் தங்கியிருக்கிற கடவுளை உணர்த்தினார்கள். இறை என்னும் சொல் அன் என்னும் உயர்திணை ஆண்பால் படர்க்கை விகுதியுடன் சேர்ந்து, வகர உடம்படுமெய் பெற்று இறைவன் என்றாயிற்று. இறை என்ற சொல்லையும் இறைவன் என்ற சொல்லையும் வேற்றுமை யின்றிப் பண்டைத் தமிழ் மக்கள் கடவுளைக் குறிக்கும் பெயராக வழங்கி வந்தார்கள்.

2. இறைவன் என்ற சொல்லுக்கு "தங்குகிறவன்" என்ற வேர்ப் பொருளிலிருந்து (root meaning) பெறப்படுகிற கருத்தினைக் கருதுவாம்.

3. தங்குகிறவன் என்றால் எங்கே தங்குகிறவன்? அல்லது எப்பொருள்களில் தங்குகிறவன்? என்ற வினா பிறக்கும். கடவு-

லைத் தவிர உள்ள பொருள்கள் உயிர்கள், (ஆன்மாக்கள்) ஆகிய உயிர்ப் பொருள்களும், மாயா உலகமாகிய உயிரில் பொருள் களும் ஆகும். எப்பொருள்களில் தங்குகிறவன் என்ற வினாவுக்கு எல்லா உயிர்ப்பொருள்களிலும் எல்லா உயிரில் பொருள் களிலும் தங்குகிறவன் என்பது விடையாகும். பகலோன் (சூரியன்) தன்னுடைய கதிரொளியினால் உலகில் எங்கும் பகலில் நிறைந்திருத்தல் போலக் கடவுள் தன்னினின்றும் பிரியாதிருக் கின்ற அருளினால் எல்லா உயிர்ப் பொருள்களிலும் எல்லா உயி ரில் பொருள்களிலும் உயிர்க்கு உயிராய் அணுவுக்கு அணுவாய் நிறைந்திருக்கின்றான் என்பதே கடவுள் எல்லாப் பொருள்களி லும் தங்கி யிருக்கின்றான் என்று சொல்லுதலின் கருத்தாகும். கடவுள் இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருத்தலி னால் அவன் "எட்டு உருவினன்" என்றும் "ஏகனுமாகி அனே கனுமானவன்" என்றும் சைவ சமய நூல்களிற் கூறப்படு கின்றான்.

4. கடவுள் எல்லாப் பொருள்களிலும் தங்கி யிருத்தல் எதன்பொருட்டு என்ற வினா, ஆராய்ச்சி செய்கிறவனது உள்ளத் தில் உண்டாகும். அவன் உயிரில் பொருள்களில் தங்காவிட்டால் அப்பொருள்களில் ஒன்றும் இயங்காது. மண் கடினமாயிருந்து ஏனைய பூதங்கள் தரித்தற்கு இடங்கொடாது; நீர் குளிர்ச்சி யுடையதாய் ஏனைய பூதங்களைப் பதஞ் செய்யாது; தீ வெப்ப முடையதாய் எரியாது; வெளி (ஆகாயம்) ஏனைய பூதங்களில் இடை உண்டாகும்படி ஊடுருவி நின்று அவைகளை அசையச் செய்து தானும் அசையாது. இந்த ஐம்பெரும் பூதங்களும் தத் தமக்குரிய நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்னுங் குணங் களை உடையனவாகா. பூதங்கள் இவ்வாறு இயங்கித் தொழில் கள் நிகழாவிட்டால் உலகியல் நடவாது.

5. இனிக் கடவுள் உயிர்ப் பொருள்களில் தங்கி யிருத்தல் எதன்பொருட்டு என்று பார்ப்போம். உயிர்களெல்லாம் தத் தமக்குரிய நிலைக்கேற்ப அறிவு வேட்கை (இச்சை) செயல்களை உடையவைகள். உயிரில்லாத பொருள்களுக்கு இந்த அறிவு

வேட்கை செயல்கள் இல்லை. மக்கள் உயிர்கள் பிற உயிர்களைப் பார்க்கிலும் விளங்கிய அறிவு வேட்கை செயல்களை உடையவர்கள். மக்கள் தனித்தும் பெருங் கூட்டமாயும் சிறு கூட்டமாயும் உலகில் நிகழ்த்தும் நிகழ்ச்சிகளெல்லாம் அறிவு வேட்கை செயல்களாலேயே நடைபெறுகின்றன இந்த அறிவு வேட்கை செயல்கள் எம்மட்டில் திருத்தமாயிருக்குமோ அம்மட்டில் அவைகளால் நடைபெறும் நிகழ்ச்சிகளும் திருத்தமாயிருக்கும். கடவுள் உயிர்ப்பொருள்களிடத்தில் தங்கி யிருக்காவிட்டால் மக்கள் உயிர்களிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் அறிவு வேட்கை செயல்கள் நிகழா. அவ்வாறுபின் அவர்களால் உலகில் ஒரு தொழிலும் நிகழாது.

6. கடவுள் எல்லா உயிர்ப் பொருள்களிலும் ஒப்பத் தங்கி யிருக்கின்றான் என்றால் ஆறறிவுடைய மக்களுயிர்களிலுங் கூட வேறுபாடான அறிவு வேட்கை செயல்கள் ஏன் காணப்படுகின்றன? என்னும் கேள்வி ஆராய்ச்சி செய்கிறவனுடைய உள்ளத்தில் உண்டாகும். இக்கேள்விக்குச் சுருக்க விடை கூறுதும். எல்லா உயிர்களுக்கும் அநாதியே ஆணவமல மறைப்பு உண்டு. அந்த மல மறைப்பினால் உயிர்களுக்கு அறிவு வேட்கை செயல்கள் விளங்குதலில்லை. மல மறைப்பு நீக்கத்துக்காகவே உயிர்கள் உடல் முதலிய கருவிகளைப் பெற்று அக்கருவிகளினுடைய உதவியால் ஏகதேசமாய் அறிவு வேட்கை செயல்கள் விளக்கம் அடைந்து வினை செய்து உலகில் வாழ்ந்து வருகின்றன. ஆதலின், மக்கள் தாங்கள் உலக வாழ்வில் அடைந்த அனுபவத்திற்குத் தக்கவாறு அறிவு வேட்கை செயல்களினது ஏகதேச விளக்கத்தைப் பெறுகின்றார்கள். வினை நீங்கிய மக்கள் முழுமையும் அறிவு வேட்கை செயல்களினது விளக்கம் பெறுகின்றார்கள்.

7. மேலே கூறியபடி கடவுள் எல்லா உயிர்ப் பொருள்களிலும் உயிரில் பொருள்களிலும் தங்கியிருந்தாலும் அவன் அப்பொருள்களில் அடங்காதவனாய் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குகிறவன். எல்லா உயிர்ப்பொருள்களும் உயிரில் பொருள்களும் கடவுளிடத்தில் அடங்கும் தன்மையை உடை

யன. சிலர் கூறுகிறபடி கடவுள் உயிர்ப்பொருளாக ஆவது உயிரில் பொருள்களாக ஆவது ஆகமாட்டான்.

8. கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் வியாபகமாய் நிறைந்திருக்கும் தன்மையினாலும் உயிர்கள் கடவுளிடத்தில் வியாப்பியமாய் அடங்கி யிருக்கும் தன்மையினாலும் இருவேறு உயிர்ப் பொருள்களுக்கும் உளதாகிய தொடர்பு அத்துவிதம் (இரண்டற நிற்றல்) என்று கூறப்படும். இந்த அத்துவிதத் தொடர்பு பற்றிக் கடவுள் எல்லா உயிர்களையும் அவைகள் தன்னை அறியாதிருக்கும் பொழுது பொதுவாயும், அவைகள் தன்னை அறியும் பொழுது சிறப்பாயும் ஆளுகை செய்து தனக்கென ஒன்றுமின்றி அவைகளுக் கேற்ற நலனை எப்பொழுதும் ஒழிவின்றிச் செய்து கொண்டே வருகின்றான். உலக வாழ்க்கையில் அரசன் கடவுளுடைய பதிலாளாய் அவனுடைய குடிகளை அவர்கள் நலத்தின் பொருட்டே ஆளுகை செய்து வருகிறவனாதலின் அரசனும் இறைவன் என்று பண்டைத் தமிழ் நூல் வழக்கில் கூறப்படுகின்றான்.

9. "முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்" என்ற குறளில் இறை என்ற சொல் கடவுளையும்;

> "இறைகாக்கும் வையக மெல்லா மவனை
> முறைகாக்கு முட்டாச் செயின்"

என்ற குறளில் இறை என்ற சொல் அரசனையும் குறித்தல் காண்க.

திருக்கோணமலை

த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்

சரித்திரச் சுருக்கம்

கனகசுந்தரம் பிள்ளையவர்கள், திருமூலநாயனாரால் சிவ பூமியென்று கூறப்பெற்ற பண்டைச் செந்தமிழ்த்தேயமாகிய ஈழமண்டலத்திலே, தேவாரம் பெற்ற சிவத்தலமாகிய திருக்கோணமலையிலே, வேளாளர் குலத்திலே, ருதிரோற்காரி௵ ஆவணிமீ ௨௪௳ (கிறிஸ்தாப்தம் ௧௮௬௩) கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்த தம்பி முத்துப்பிள்ளை என்பாருக்கு அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தார்கள். சில காலம் சிற்றார் உயர்தர பாடசாலையில் பிரதமாசிரியராகவும், சைதாப்பேட்டை ஆசிரிய கல்லூரியில் ஆங்கில போதகாசிரியராகவும் இருந்து, தமிழ்ப் புலமையிலும் சிறந்து, தத்தைவிடுதூது, மோகனாங்கி முதலிய அரிய நூல்களியற்றி உலகிற் குபகரித்தவராகிய சிவபதமடைந்த ஸ்ரீமாந். த. சரவணமுத்துப்பிள்ளை பீ. ஏ. என்பார் இவர்களுக்குச் சகோதரராவர். கனகசுந்தரம் பிள்ளையவர்கள், பிள்ளைமையில், திருக்கோணமலையிலிருந்த அறிஞர்களாகிய ஸ்ரீ கதிரைவேற் பிள்ளை, ஸ்ரீ கணேச பண்டிதர் என்பாரிடம் தமிழிலக்கிய இலக்கணங்களும், ஆங்கிலமும் கற்றுணர்ந்து, கல்வியிற்பேரவாவும், நுண்மதியுமுடையராய்ப் பதினான்கு வயதளவில் திருவாதவூரர் புராணம் மறைசையந்தாதி முதலிய நூல்களுக்குப் பொருள் கூறும் ஆற்றலுடையவர்களா யிருந்தார்கள். ௧௮௮௦-ம் ஆண்டில் சென்னைமாநகர் சென்று முதலில் செங்கல்வராய நாய்க்கர் பாடசாலையிற் கற்று, மத்திய பாடசாலைப் பரீட்சையில் சித்தி யெய்தினார்கள். பின், பச்சையப்பன் காலேஜில் எப். ஏ. வகுப்பிலும், பிரசிடென்சி காலேஜில் பீ. ஏ. வகுப்பிலும் சித்தியெய்தினமையோடு, பீ. ஏ. வகுப்பில் தத்துவ சாஸ்திரத்திலும் தமிழிலும் விசேஷசித்தி யடைந்தமை காரணமாக மிகச் சிறந்த பரிசுகளும் பெற்றார்கள். கல்லூரிப் பிரதமாசிரியர்களும், மற்றைய ஆசிரியர்களும், அறிவொழுக்கங் காரண

-மாக இவர்களிடத்து மிக்க பிரீதியுடையவர்களாயிருந்தார்கள். அதன்பின் பிள்ளையவர்கள் அரசாட்சியாரது வித்தியாபிவிருத்தி நிலயத்தில் உத்தியோகம் பெற்று, அதனை மிக்க திறமையோடு முறை வழுவாது நடாத்தி வந்தார்கள். சிலகாலஞ் சென்றபின் இராசாங்கலேக நிலயத்தில் உத்தியோக மாற்றம் பெற்று, அந்நிலயத்திற்றானே வித்தியாபிவிருத்தி நிலய சம்பந்தமான காரியங்களுக்கு அத்தியட்சர்களுமாயினார்கள். யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பதிவாசரும், கிராமக்கோட்டு நீதிபதியுமாகிய ஸ்ரீமாந். சிதம்பரநாத முதலியார் புதல்வியாகிய சுந்தரம் என்னும் பெண்மணியை விவாகஞ்செய்து அறநெறிவழுவாது இல்லறமோம்பித், திருவாளர்களாகிய இராசராசன் பீ.ஏ.; இராஜசேகரன் பீ.ஏ. (ஹானர்ஸ்), இராசேசுவரன், இராசமார்த்தாண்டன் என்னும் புதல்வர்களையும், செல்வநாயகி என்னும் புதல்வியையும் பெற்று மகிழ்வுற்றார்கள். இப்புதல்வர்கள் தங்கள் அரும்பெறற்றந்தையார்க்குளவாகிய சீலமெல்லாம் இனிதமையப்பெற்று மன்னுயிர்க்கினியராய், "தக்கார் தகவில ரென்பதவரவ ரெச்சத்தாற் காணப்படும்" என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியம் புதுக்குவது காணும் அறிஞரெல்லாம் "நீவிர் பல சிறப்புக்களும் பெற்று இனிது வாழ்க" என்று இவர்களுக்கு ஆசிகூறி, இறைவனருளை வேண்டி நிற்பதுகண்டு மகிழ்கின்றோம். இவர்கள் புதல்வியார் சென்னைப் பிரஸிடென்ஸித் தபாலாபீசுத் தலைவராயிருந்து தேகவியோகமடைந்த ஸ்ரீமாந் ராவ் பகதூர் க. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் சியேட்ட புத்திரராகிய ஸ்ரீ இரங்கநாதன் என்பாரை விவாகஞ்செய்து, ஆங்கிலமுஞ் செந்தமிழும் கற்றுணர்ந்து அறிவொழுக்கங்களிற் சிறந்தவராய்ப் பல சிறப்புக்களோடும் வாழ்கின்றனர். பிள்ளையவர்களது மனைவியார் பல வருடங்களின் முன, தமது இருபத்தெட்டாவது வயதில், தேகவியோகமாயினர். அஃது பிள்ளையவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பெருந்துயர் தருவதாயிற்று. பிள்ளையவர்கள் தங்கள் பிள்ளைகளை அன்புடன் வளர்த்துக் கல்வி யறிவொழுக்கங்களாற் சிறப்புறுவித்து அவையத்து முந்தியிருப்பச் செய்த திறன் வியக்கற்பாலது.

கனகசுந்தரம் பிள்ளையவர்கள் தங்கள் உத்தியோகக் கடமைகள் ஒழிந்த மற்றைய காலங்களிலெல்லாம், பழந்தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் ஆராய்தலையே பெருங்கடனாகக்கொண்டு ஒழிவின்றி உழைத்து வந்தார்கள். சென்னையிலிருந்த வித்வான் இராசகோபாலப் பிள்ளையவர்கள் உதவி கொண்டு கம்பராமாயணத்திற் சில பாகங்களையும், வேறு சில நூல்களையும் மிக நுண்ணிதாக ஆராய்ந்து கொண்டார்கள். ஏனைய நூல்களையெல்லாம் தாங்களாகவே இடைவிடாது கற்றுணர்ந்தார்கள். தொல்காப்பியத்தையும் சங்ககாலத்து இலக்கியங்களையும் ஏட்டுப்பிரதிகள் பலவற்றோடு ஒப்பு நோக்கி நுண்ணிதாக ஆராய்ந்து கொண்டார்கள். இந்நூல்களிலுள்ள உண்மைப் பாடங்களும், நுண்பொருளுங் கண்டறிதலில் தமிழ் நாட்டில் ஒப்புயர்வின்றி விளங்கினார்கள். இவர்களாற் பிள்ளைமையிலும் பிற்காலத்தும் பாடப்பட்ட சில செய்யுட்கள் அவ்வக்காலங்களில் வெளியிடப்பட்டுள்ளன. அவை பண்டைச் சான்றோர் செய்யுட்கள்போல ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் கொண்டுள்ளன. பிள்ளையவர்கள் தாங்கள் அரிதிற் கற்றுணர்ந்த தமிழ்க்கல்வியைப் பிறர்க்கும் பயன்படச் செய்வான் கருதிச் சிறிதும் சிரமம்பாராதும் கைம்மாறு கருதாதும் பிறரியற்றிய நூலுரைகளுக்கு இன்றியமையாத் துணைபுரிந்தும், அவற்றைப் பரிசோதித்துத் திருத்திக் கொடுத்தும், பண்டிதர் பலர்க்கு நூலுரைகளில் நேர்ந்த ஐயங்களை நேராகவும், கடிதவாயிலாகவும் தெளிவித்தும் பேருதவி புரிந்து வந்தமையோடு, ஆங்கிலத்திலும் பி. ஏ. பரீட்சைக்காகக் கற்ற பலர்க்குப் பல நூல்களிலும் நேர்ந்த ஐயங்களைத் தெளிவித்தும் உதவி புரிந்து வந்தார்கள். ஆறுமுக நாவலரவர்கள் செந்தமிழ் வளர்ச்சி கருதிப் பரோபகாரமாகத் தாபித்த வித்தியாநுபாலன யந்திரசாலையிற் பிரகடனமாகும் புத்தகங்களிலுள்ள நூலமுத்திரித வழுக்களையும் பிறவற்றையும் நெடுங்காலமாகத் திருத்தஞ்செய்து உபகரித்து வந்தார்கள். அம்மட்டோ ! தமிழ் நாட்டில் இவர்கள் காலத்திருந்த புலவர்களுள் கல்வி விஷயத்தில் இவர்களது இன்றியமையாப் பேருதவியைப் பெறாதவர்கள் இல்லையெனக்

கூறினும் அஃது ஒரு சிறிதும் புனைந்துரையாகாது. "கைம்மாறுவேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்பது பொய்யா மொழியன்றோ! சிவபதமடைந்த வித்வச் சிகாமணிகளாகிய சி. வை. தாமோதரம் பிள்ளை, திருவனந்தச் சுந்தரம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் முதலிய பலர் தாம் தாம் பதிப்பித்தனவும், இயற்றி வெளியிட்டனவுமாகிய பற்பல நூலுரைகட்கெல்லாம், பிள்ளையவர்களது பேருதவி இன்றியமையாததாயிற்று. நாராயணசாமி ஐயரவர்களது நற்றிணையுரையை, அவர்களிறந்த பின்னும் பிள்ளையவர்களே பரிசோதித்து அச்சிடுவிக்க வேண்டியவர்களானார்கள். பண்டிதர். நா. கதிரைவேற் பிள்ளை முதலிய சிலர் இவர்களிடம் தொல்காப்பியத்தைக் கற்றுணர்ந்து கொண்டனர் என்பர். சென்னையிலும் பிறவிடங்களிலுமுள்ள இப்பொழுதைப் புலவருள்ளும் பல்லோர் இவர்களிடம் கல்வி விஷயமாக இன்றியமையா உதவிகளைப் பெற்றோரும், நூலுரைகளைக் கற்றறிந்தோருமாவர். மஹா மஹோபாத்தியாயர் ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள் தாங்கள் வெளியிட்ட நூலுரைகளுக்கு, இடையிடையே பிள்ளையவர்களையும் உசாத்துணைவர்களாகக் கொண்டுள்ளார்கள். ஸ்ரீமத் அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள், ஸ்ரீமத் நமச்சிவாய முதலியாரவர்கள், ஸ்ரீமத் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் என்பவர்களும் தாங்கள் தாங்கள் வெளியிட்ட நூலுரைகளுக்குப் பிள்ளையவர்களது இன்றியமையாப் பேருதவியைப் பெரிதும் பெற்றுள்ளார்கள். பிள்ளையவர்களது வடநூலுணர்ச்சி மாண்பையும் மொழி பெயர்க்கும் ஆற்றலையும், ஸ்ரீ பண்டித நடேச சாஸ்திரியார் அவர்களுக்குப் பின் இவர்களால் மொழி பெயர்த்துப் பிரகடனஞ் செய்யப்பட்ட வால்மீகி ராமாயணத்துக் கிஷ்கிந்த காண்டப் பாகமும் சுந்தர காண்டமும் காட்டும். இலக்கிய இலக்கண நூலுணர்ச்சி வன்மையையும் ஆராய்ச்சித்திறனையும் பிள்ளையவர்களாலும் அவர்களது இன்றியமையாப் பேருதவிகொண்டு பிறராலும் வெளியிடப்பட்ட அரிய நூல்களும், "யாப்பிலக்கணம்" "திருவள்ளுவர்" "இராமாயணம்" முதலாக மாசிகசஞ்சிகைகளிலும் பிறபத்திரிகைகளிலும் பிள்ளை

யவர்களால் எழுதப்பட்ட அரிய விஷயங்களும் காட்டும். சமய நூலுணர்ச்சியை இவர்களாற் பரிசோதித்துத் தூலமுத்திரித வழுக்களும் பிறவுமாக நுண்ணிதினுய்ந்து திருத்தப்பட்ட சிவ ஞானபாடியம், திருமந்திரம் முதலிய நூல்கள் காட்டும்.

பிள்ளையவர்கள் நெடுங்காலமாகச் சென்னைச் சர்வ கலா சாலைப் பரீட்சகருள் ஒருவராயிருந்தமையோடு நான்கு வருட காலமாகப் பரீட்சக சங்கத்துக்குத் தலைவர்களாகவும் இருந்தார்கள். அன்றியும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சகருள் ஒருவராகவும் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜிலும் பச்சையப்பன் காலேஜிலும் தமிழ்த் தலைமைப் புலவர்களாகவும் இருந்தார்கள். சாண்டலர்துரை என்பாரால் அரசினராஞ்ஞைப்படி நடத்தப்பட்டுவரும் மிகப் பெரிய தமிழகராதிக்கும் சிலகாலம் உதவிப் பதிப்பாசிரியர்களாக இருந்தார்கள். இவ்வகராதி சென்னை யரசினரால் பெருந்தொகைப் பொருள் கொடுத்து நடாத்துவிக்கப்படுகின்றது. இதனை ஏற்றவாறு சிறப்புறச் செய்து முடித்தற்கு ஆங்கில நூலுணர்ச்சியும் மிகப் பெரிய தமிழறிவும் சமஸ்கிருத நூலுணர்ச்சியும் ஒருங்கு கைவரப் பெற்ற பிள்ளையவர்களைப் போன்ற ஒருவர் தமிழ்நாடு முழுவதி லும் கிடைப்பதரிது என்பது ஆபாலகோபாலப் பிரசித்தம். அங் ஙனமாகவும், தமிழணங்கும், அரசினரும் புரிந்த தவக்குறையே போலும்! பிள்ளையவர்கள் ஒரு வருடகாலத்துள் இவ்வேலையி னின்று விலகிக்கொண்டார்கள். எவ்வேலையைக் கையேற்பினும் "செய்வன திருந்தச்செய்" என்றவாறு அதனைச் சிறப்புறச் செய்துமுடித்தலும், பொருள் வருவாயையும்பொய்ப்புகழையுமே கருதி முகமன் வார்த்தைகள்கூறி நடுவுநிலைமை குன்றுமையும் நம்பிள்ளையவர்களுக்கு இயல்பாகும். "கேடும் பெருக்கமுமில் லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கணி" என்பது தமிழ்மறை. பல வருடகாலமாகப் பிள்ளையவர்கள் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றவாறு வடமொழி தென்மொழி களில் வல்ல கவிஞர் சிகாமணியாகிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்கு ஆப்த நண்பினர்களும், நல்விஷயத்தில்

உசாத்துணைவர்களுமாகி அவர்களோடு சேர்ந்து நம்பியகப் பொருளுக்கு ஓர் அரிய உரையை எழுதி வெளியிட்டும், கம்ப ராமாயணத்தைப் பிழையறப் பரிசோதித்துக் கூடிய மட்டில் ஏட்டுப்பிரதிகள் பலவற்றோடு ஒப்பு நோக்கிச் சுத்த பாடங் கண்டு முழுவதையும் அரும்பதவுரையோடு அச்சிடமுயன்று, முதலில் பாலகாண்டத்தை அவ்வாறு வெளியிட்டுமுள்ளார்கள். இவ்வரும்பதவுரை கம்பசூத்திரத்து நுண்பொருள்களை நன்கு தெரித்துக் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரும்பயன் தருவதா யமைந்துள்ளது. அயோத்தியா காண்டமும் அவ்வாறே பரி சோதித்துச் சுத்த பாடமாக்கப்பட்டும், அரும்பதவுரை பூர்த்தி யாக முன்னே, இவர்களிருவரும் ஒருவர்பின் ஒருவராகச் சென் றமையால், அது கடைபோக முடிந்து அச்சுவாகனமேற முடி யாததாயிற்று. இந்நூல் முழுவதும் இவ்வாறே இப்புலவர் திலகர்களாற் பரிசோதித்து வெளியிடப் பெறுமை கம்பநாடர் தவக்குறைவோ நம்மனோர் தவக்குறைவோ அறியகில்லேம். தமிழ் நாவலர் சரிதை யென்னும் நூலும் ஈழமண்டலத் தேவார முந் திருப்புகழும் என்னும் நூலும் வேறு சில நூல்களும் பிள்ளையவர்களால் குறிப்புரையோடு, அச்சிடப்பட்டனவாகும். பிள்ளையவர்கள் தொல்காப்பிய முழுவதையும் ஆராய்ந்து குறிப் புரை முதலியவற்றோடு அச்சிட நினைத்து ஏட்டுப்பிரதிகள் பல வற்றை வைத்து ஆராய்ந்துகொண் டிருந்தார்கள். தங்களறிவும் ஆராய்ச்சியும் மிகச் சிறிய வென்பதையும், அவைகொண்டு நூலுரைகளைப் பிழைபட வியற்றி வெளியிடுதல் அநீதி என்ப தையும் நோக்காது பொருள் வருவாயையும், பொய்ப்புகழை யுமே கருதி அவற்றை வெளியிடுவது நம்மவருட் பெரும்பாலர் இயல்பு. தக்க ஆராய்ச்சியின்றி அவ்வாறு செய்தல் நம்பிள்ளை யவர்கள் போன்ற அறிஞர்க்கு ஒருபோதும் கருத்தன்று. இத னால் பிள்ளையவர்கள் பெயர் பெரிய எழுத்திற் புத்தகமுகத்துக் காணப்படா தொழியினும் அத்தகைய புகழ்விரும்பப்படா தொழியினும், இவர்கள் காலத்தில் இவர்கள் உதவிகொண்டு பிரகடனமாகிய அருந்தமிழ் நூல்கள் பல என்பதிற் சிறிதும் ஆக்ஷேபமில்லை. "இனித்தமிழுக்கு வரம்புமில்லை; உரை கல்லு

யில்லை" எனக் கூறப்பட்டதும் ஒரு சிறிதும் தவறாகாது. பிள்ளையவர்கள் அரசினர்பால் உபகாரச்சம்பளம் பெற்றிருந்த பிற்காலத்தில் தமிழிலக்கணவிலக்கிய வரலாற்றை நன்கு ஆராய்ந்து சர்வ கலாசாலையிற் பலர்க்கும் பயன்படுமாறு பிரசங்கிக்க வேண்டுமென்று அக்கலாசாலை அதிகாரிகளோடு ஒழுங்கு செய்திருந்தார்கள். அதனால் எவ்வளவோ உண்மைகளும் தவறுகளும் வெளியாகுமென்று பலர் நம்பியிருந்தார்கள், இவர்கள் மரணம் காத்திராப்பிரகாரம் சடிதியில் நேர்ந்து விட்டமையால், அவ்வெண்ணம் நிறைவேற முடியாததாயிற்று. நெருநலுளனொருவனின்றில்லை யென்னும் பெருமையுடைய இவ்வுலகியல் நோக்கித் திருவருளை நினைத்து ஒருவாற்றான் அமைவதேயன்றி, இருகாற் பசுக்களாகிய நம்மவராற்றலால் ஆவது மொன்றுளதோ? தொல்காப்பிய முதலிய இலக்கணங்களை யெல்லாம் பல்காற்பயிலு முகத்தால், இக்காலத்து, அவற்றை ஒருவாறு உணர்ந்திருப்பார் ஒரு சிலருளராயினும், அவற்றை நுண்ணிதினாய்ந்துணர்ந்து பரோபகாரமே கருதிச்சிரமம் பாராட்டாது மாணவர்க்குரைத்து வந்தவர்கள், நம்பிள்ளை யவர்களே யென்பது அவர்கள்பால் அந்நூல்களிற் பெரும்பாகத்தைக் கற்றுணர்ந்துகொண்ட அம்மாணவர்கள் நன்கு தெளிந்த உண்மையாகும். தமிழணங்கும் ஆதார மற்றவளாயினாள். உலகத்தில் தமிழை வளர்க்கின்றோம் என்று கொடிகட்டிப் பிரசித்தம்செய்து புத்தகங்களைப் பிரகடனஞ் செய்வோரை உற்று நோக்கின் அவருட் பெரும்பாலார் தந்நயமொன்றையே கருதிப் பெரும்பொருளீட்டித் தமக்கும் தம்பெண்டிர் பிள்ளைகட்கும் இம்மைச் சுகமொன்றையே தேடிவைத்துச் செம்மாப்புற்றொழிவாராகின்றனர். நம்பிள்ளையவர்களோ தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கித் தம்பெயரையும் பிறவற்றையும் கருதாது, தமிழுக்காக உழைத்த பெருமாண்பும், அருமை பெருமையும் அவர்களோடு நன்கு பழகியோரே அறியவல்லுநர். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" எனவும் "முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டாயாரே யழகுக்கழகு செய்வார்" எனவும் வரும் ஆன்றோர் வாக்குக்களும் ஈண்டு நோக்கற்பாலன. பிள்ளையவர்

களைப்போன்ற நற்குண நற்செய்கைகளிற் சிறந்த நல்லிசைப் புலவர்களை இத்தமிழுலகம் அடையுங்காலம் எக்காலமோ அறிய கில்லேம். கம்பநாடர் சீதாபிராட்டியின் அழகைக் குறித்துக் கூறுமிடத்து இப்பாவை தோன்றலால் “அழகெனு மதுவு மோரழகு பெற்றதே” எனப்புகழ்ந்து கூறியாங்கு, அறிவு, வாய்மை, அடக்கம், நடுவுநிலைமை முதலிய மன்னுயிர்க்கின்றி யமையாக் குணங்களெல்லாம் நம்பிள்ளையவர்களால் சிறப்புறு வனவாயின என ஒருகாற் புனைந்துரைப்பினும் அது குற்றமா காது. பொதுக்குணங்கள் இல்வழிச் சிறப்புக் குணங்களெல் லாம் நடிப்பு மாத்திரையே ஆவனவன்றி விழுப்பந்தருவனவாகா. இத்தகைய அருமை பெருமை வாய்ந்த புலவர் சிகாமணியாகிய பிள்ளையவர்கள ஒழுக்க வரலாற்றினையும் நுண்மாணுழை புலத் தோடு கூடிய கல்வி மாண்பையும் அவற்றுள் ஒரு சிறிதும் அமையப்பெறுத யாமா கூறவல்லம்.

நேரிசை வெண்பா

செந்தமிழ்நூன் முற்றுமுணர் சீரார் புகழ்க்கனக
சுந்தரவேள் வாழ்க்கை துறந்ததனுற்—செந்தமிழாம்
மாதார நொந்து வருந்தினளே பாவலரும்
ஆதார மற்றனரே யாம்.

தொல்காப் பியமுதலாந் தொன்னூல் விழுப்பொருளும்
பல்காப் பியமும் பலர்க்கருள—வல்லவனுஞ்
சொல்லார் திறற்கனக சுந்தரன்போ லிவ்வுலகில்
நல்லா ருளரோ நமக்கு.

புத்திரர்கள் செவ்விகண்டுன் புந்திநிலை நன்குணர்ந்தே தன்
துத்தியஞ்சேர் நற்கனக சுந்தரனே—எத்திறத்துந்
தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

சூது

[காழி. சிவகண்ணுசாமி அவர்கள் B. A.]

பெரும் புகழ் படைத்த ஆல்பிரெட் மன்னர் ஒருநாள் இருபத்து நான்கு மணிகளில், எட்டு மணி நேரம் அரசுக் கடனாற்றியும், எட்டு மணி நேரம் இளைப்பாறியும், எட்டு மணி நேரம் உடற் பயிற்சியிற் செல வழித்தும் வந்ததாகக் கூறுவதுண்டு. அவர் ஓரரசரானமையின் உடற் பயிற்சியிற் செல வழித்து வந்த எட்டு மணி நேரத்திலுங்கூடப் பலதிறப்பட்ட உயர்ந்த நினைவுகளை நினைந்திருத்தல் கூடும். எனினும், அரசரே யன்றி ஏனையோர் யாவருக்குமே உடற் பயிற்சிக்கான கால வசதி யிருத்தல் இன்றியமையாததே. நாளொன்றிற்கு எட்டு மணி நேரம் அதிற் கழிப்பதென்பது மிகையெனக் கூறுறுதாயினும், அவ்வாறு கழித்தற் குரிய நேரத்தையும், உடற் பயிற்சிக் குரிய சாதனத்தையும் நன்கு தேர்ந்து கொள்ளல் தலையாய கடனாகும். தேர்ந்து கொண்ட பயிற்சி வகை தானும் தனக்கும் பிறர்க்கும் எத்தகை யானும் இன்னா பயவாததாயும், உடல் நலத்திற்குக் காலத்தானே கேட்டை விளைவியாததாயும் இருத்தல் நேரிதாம். இத்துறை நோக்குங்கால், திறந்த வெளியிடங்களில் ஆடப்படுவதான விளையாட்டுகளே மிகவுஞ் சிறந்ததாம். என்னை? அவையே உடல் நலத்தை யுலவாதளிப்பனவாயும், இரவானன்றிப் பகற்கண் விளையாடற் பாலனவாயும், வைகறைத் துயிலெழுந் தூய வழக்கத்தை யூட்டுவனவாயும் இருக்கின்றனவாகலின் காலசக்கரச் சுழற்சியின் பயனாய்த் தற்கால இளைஞர்கள் வயிற்றுப் பிழைப்பு நோக்கிப் பெரும் நகரங்களிலே வாழ்ந்து வருதலே இயற்கையாக மாறிவிட்டமையின் அவர்களுக்கு இத்தகைய புரையற்ற விளையாட்டுப் பயிற்சிகளிற் காலங்கழிக்க ஏற்ற வசதி யில்லா தொழிகின்றது. எனவே அவர்கள் பெரும்பாலும் புத்தகங்களுக்கும், ஆட்டக் கொட்டகைகளுக்கும், சூதரங்குகளுக்கும் இடையே காலத்தைக் கழிக்க வேண்டியவர்களாகின்றனர். இக் குறித்த மூன்றில் முன்னைய தொழிந்த பின்னையவிரண்டனுள் இரண்டாவதான

சூதரங்கே சூழும் வினையாகலின் அதுவே முதற்கண் அஞ்சி யொதுக்கற் பாலதாம்.

பிறர் பொருள் வெளவும் பேதைமையே யடிப்படையாகக் கொண்டதன்றோ சூது? வெளவும் பொருட்டு ஈடாக ஒன்றைக் கொடுத்தபின் பெற வேண்டும் என்பதோ அன்றி என்றேனும் கொடுத்தல் வேண்டும் என்ற நியதியோ அதன்கண் இல்லை. எனவே, சூது இயல்பாகவே தீயதென்றும் என்றென்றும் தன் வலைப்பட்டாரைத் தீய வழிக்கண்ணே யுய்க்குமென்றுங் கூறவும் வேண்டுமோ? சூதாடிச் சுகமுற்றான் என்று ஒருவனையும் இது காறுஞ் சுட்டிக் காட்டுதற்கில்லை; மற்று பொருள் கெடுத்துப் பொய் மேற்கொண்டு அருள் கெட்டு அல்லலுழக்கும் பலரையோ எளிதிற் காட்டலாம். என்னை, சூதென்ற ஒன்று என்றென்றும் பொருள் கருதியே யாடப்படுமாகலின், அரிதிற் பெறுங்காலத்தை வறிதே கழிப்பதன்றியும் நெறியல்லா நெறியிற் கழிக்கவும் ஒருப்படுவரோ நற்குடிப் பிறந்த இளைஞர்,

"ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு?"

இளைஞர்கள் இத்துறையிற் கழிக்குங் காலம் எத்துணையோ அத்துணையும் கொன்னே கழிந்ததாகவே கொள்ளல் வேண்டும். கற்பதினும், கற்றதை யெழுதுவதிலும், இன்றேல் மறுநாட் காலை யெழுந்ததும் பணி யியற்றுவதைச் செம்மையாயியற்றற் கேற்றவாறு போதிய வளவு இளைப்பாறுவதிலுங் கழிக்கப் படற் குரிய அருமைசேர்காலம் சூதென்னும் பேயினால் விழுங்கப் படு வதைக் காணின் யார்தான் கவலை கொள்ளார்? எனவே, சிறுமை பல செய்து சீரழிக்கும் இச்சூதை, வறுமையை யன் றிப் பெருமையை யளியா இச்சூதை இளைஞர்கள் தொத்து நோயைக் கண்டாலன்ன வெறுத் தொதுக்கி வாழ்வதே சால் புடைத்தாம்.

கலங்கரை விளக்கம்

(திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி அவர்கள், B. A.

கலிவிருத்தம்

1. ஓது செல்வமிக் கோங்கு சென்னையி
னீதி சாலை நிமிர்தரு சேட்சிமை
மீது நின்று மிளிர்ந்திருள் போழுபு
சோதி யொன்று சுழன்றொளிர் கின்றதால்.

2. அளக்க ரிற்செல வார்ந்துவங் கலமெலாந்
துளக்க முற்றுத் துயரடை யாவண
மளக்க ரும்புக ழாளர் கலங்கரை
விளக்க மென்னவொன் றிட்டனர் மேலைநாள்.

3. அன்ன வெண்ணங்கொண் டாக்கின ரேனுமஃ
தின்ன மும்பல வின்பய னல்குபு
மன்னு கிற்றன் மதிக்கு மெமதுள
முன்னி யுன்னி யுவகை சிறக்குமால்.

4. உலக மாந்தர்க் கொளியே யுயர்ந்ததென்
றிலகு முண்மை யினிது விளக்குபு
மலைக வின்றுயர் மாடத்து மீமிசைப்
பலக திர்த்திரள் பண்பிற் பரப்புமே.

5. ஆக்க மோங்குந மாங்கில மன்னவர்
தாக்கு தம்பிர தாபம் பகையிருள்
போக்கு தற்குப் பொருந்து மறிகுறி
யாக்கொள் நிற்ப தமைவுடைத் தேயரோ.

6. மன்ற மேறுபு வாய்மொழி கூறுநர்
நின்று தங்கொள்கை நேர்ந்து நிறுவுந
ரொன்று மெய்ம்மை யுணர விழையுந
ரென்றின் னோர்கட்கு மேனைய மக்கட்கும்.

7. கரவு செய்யலிர் கட்டுரை கூறுமி
னொருவன் றேவ னுளன்கண்டீ ரென்றுதன்
சிரமி வந்துயர் செவ்விய கோலெனும்
விரலிற் சுட்டி விளம்புதன் மானுமே.

8. மக்கட் கின்னுரை மாண்பின் வழங்குந
ரொக்க யாரு மொருங்குறக் கேட்டற்குத்
தக்க தோருயர் தானத்தின் மேலெழீஇத்
தொக்க தங்கைகள் சொல்லுழி நீட்டல் போல்.

9. வன்பு மாக்கள் வழிப்பட் டுழலுபு
துன்புற் றுரைத் துயர்களை நீதித்தா
யின்ப மீகுவ லென்வயிற் போதுதி
ரென்ப வட்போன் றிருங்கதிர் வீசுமால்.

10. கடமை யிற்பிறழ் கல்லார் பொதுளிவிண்
டடவு மாடத் தலைக்கண் விளக்கந்தான்
படமெ டுத்துயர் பாந்த ளரையன்றன்
சுடிகை மேவுஞ் சுடர்மணி போலுமே.

11. உம்பர் நோக்கி யொளிசெய்து சுற்றிவந்
திம்ப ரிவ்விளக் கெங்கணு மின்னலா
னம்ப னந்த நறுந்தமிழ் வேட்டவ
னெம்பி ரான்சடை யென்றலு மொக்குமே.

12. சுற்றி நின்று சுடர்க்கற்றை வீசலா
னுற்று நோக்குந ருள்ள மலர்த்தலான்
மற்றி ராப்பொழு தத்தின் வயங்கலான்
வெற்றி வேணியன் மேலொளிர் திங்களோ ?

13. ஓரும் போழ்தினி லுவ்விளக் கம்புடை
சாரும் பற்பஃ றனிமலை தாணடுத்
தேரி யன்றுய ரின்னலஞ் சான்ற பொன்
மேரு மாமலை மேலொளி ரீசனோ ?

14. எண்ணு மிந்நக ரேயிவ் விளக்கமே
கண்ணி மாந்தரைக் காக்குங் கறைமிடற்
றண்ண லார்த மருள்கெழு மாவலக்
கண்ணெ ணுவிது கண்டுளம் பொங்குமால்.

15. இங்கி ருக்குமெ மின்றமிழ்ப் பாவலர்
தங்க ளுக்குத் தழைத்துவந் தெம்முள
மிங்கி தத்தி னெழுந்து குதித்துறப்
பொங்கு மாறு புகலுதற் பாலதே.

16. வென்றி மாப்படை வீரர் புரந்திட
நன்றிவ் வாங்கில ராச்சிய ஞாலத்தி
னென்று மென்றாழ் மறைகுத லில்லையா
மென்று கூற லியையு மியையுமே.

—ஞானபோதினி.

சிவஞான போதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் B. A.]

முதலாவது சூத்திரம்

முதலாவது பகுதி

இரண்டாவது அதிகரணம்

இரண்டாவது அதிகரணம் (கூறு) என்று ஒரு அதிகரண மாய் எடுக்கப்பட்டாலும் அது மூன்று பிரிவுகளை யுடையது. முதலாவது பிரிவு உலகம் உள்பொருள் என்பது.

2. சிலர் கூறுதல் போல உலகமானது மித்தை (பொய்) அல்லது இல்லாத பொருள் அல்ல. உள்ள பொருள் தோன்றுமே தவிர இல்லாத பொருள் தோன்றாது. இது "சற்காரிய வாதம்" என்று சைவ சித்தாந்தத்திற் கூறப்படும். தோன்றுதல் என்பது தூலமாய் (பருப்பொருளாய்) நமது கண்ணுக்குத் தெரியும்.

படி காரியப்படுதல். இவ்வாறு காரியப்படுதலானது அந்தப் பொருளுடைய சூக்குமநிலை (நுண்ணிய நிலை) யிலிருந்து உண்டாகுமே அன்றி ஒன்றுமில்லாத சூனியப் பொருளிலிருந்து உண்டாகாது. இது நமக்கு உலகில் கண்கூடான (பிரத்தியக்ஷமான) பழக்க அறிவு (அனுபவ அறிவு). எடுத்துக் காட்டாக நாம் கண்ணுக்குத் தெரிகிற ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் ஒரு சிறிய ஆலம் விதையிலிருந்து ஒரு பெரிய ஆலமரம் உண்டாகிறதைப் பார்க்கிறோம். ஒரு பெரிய ஆலமரமாயுண்டாகிற சத்தியானது அதனுடைய சிறிய விதைக்குள் அடங்கியிருப்பதினாலேதான் உள்ளே அடங்கி யிருக்கிற சத்தியானது காலக்கழிவில் ஒரு பெரிய ஆலமரமாகின்றது. மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சியாளர்கள் அடங்கி யிருக்கிற சத்தியை (Latent Energy) என்றும், வெளிப்பட்ட சத்தியை (Patent Energy) என்றும் கூறுவார்கள். அதுபோல நாம் பெரிதாய்க் காணுகிற இந்தச் சடஉலகம் சத்திக் கூட்டமாய் (சத்தி சமூகமாய்) ஒடுங்கியிருக்கிற நுண்ணியமாயை (Primordial matter) என்கிற அநாதி நித்தியப் பொருளிலிருந்து கடவுளுடைய நினைப்பினால் (சங்கற்பத்தினால்) உண்டாகிறது.

3. இனி அவ்வாறு உள்பொருளாய் நாம் காணுகிற உலகமானது அதனைச் செய்வான் ஒருவனையின்றி அமையாது என்பது இந்த அதிகரணத்திலுள்ள இரண்டாவது பிரிவு. நமது பழக்க அறிவில் நாற்காலி போன்ற யாதாமொரு செயற்கைப் பொருளைப் பார்த்தால் அதனை ஒருவன் செய்த பொழுது நாம் பார்க்கா விட்டாலும் அதனைத் தச்சன் ஒருவன் செய்திருத்தல் வேண்டுமென்று அறிகிறோம். அந்நாற்காலியில் நாம் காணுகிற வேலைப் பாட்டிலிருந்து அத்தச்சனது செய்தொழிற்றிறனையும் அறிகிறோம். அதுபோல நாம் உள்பொருளாய்க் காணுகிற பருப்பொருள் உலகத்திலிருந்து அதனைச் செய்த கடவுள் ஒருவன் உண்டு என்று அறிதலுமல்லாமல் அக்கடவுளது ஆற்றலையும் ஒருவாறு அறிகிறோம்.

4. இனி, எந்த ஒரு பொருளினிடத்து உலகம் அழியும்

பொழுது அடங்கி ஒடுங்குமோ அந்தப் பொருளினிடத்தி லிருந்தே ஒடுங்கியவாறே மீளவும் தோன்றும் என்பது இரண்டாவது அதிகரணத்திலுள்ள மூன்றாவது பிரிவு. உலகம் தோன்றுதல் என்பது சற்காரிய வாதத்தின்படி அதனுடைய நுண்ணிய நிலை (சூக்குும நிலை) யானது திண்ணிய நிலை (தூலநிலை) யாக மாறுதல் என்று நாம் மேலே கண்டோம். அவ்வாறே அதனுடைய திண்ணிய நிலை (தூல நிலை) நுண்ணிய நிலை (சூக்கும நிலை) யாக மாறுதலே அது அழியுங்கால் ஒடுங்கும் நிலையாகும். உலகம் அழிந்து மீளவும் தோன்றும் பொழுது அது இந்த ஒடுங்கிய நிலையாகிய நுண்ணிய நிலையிலிருந்தே வெளிப்பட்ட நிலையாகிய திண்ணியநிலை (தூலநிலை)யை அடைதல் வேண்டும். இவ்வாறு உலகம் ஒடுங்குதற்கு ஒரு நிலையான இடம் வேண்டும். உலகம் எந்தப் பொருளில் ஒடுங்குமோ அது மாயை யென்று கூறப்படும். இந்த மாயையானது மூன்று அநாதி நித்தியப் பொருள்களில் (காலங்கடந்த நிலையான பொருள்களில்) ஒன்று ஆகும். ஆகவே உலகம் மாயையிலிருந்து தோன்றி மாயையில் ஒடுங்கும் என்பது பெறப்பட்டது.

5. இனி மாயை உயிரில்லாப் பொருளாகலின் அது ஒரு உயிர்ப்பொருளின் தொழிலால் அன்றித் தானே உலகமாகத் தோன்றமாட்டாது. மண் ஒரு குயவனையின்றித் தானாக ஒரு குடம் ஆகமாட்டாதது போல உலகத் தோற்றமாகிய தொழிலிலிருந்து அத்தொழிலைச் செய்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்றும், செய்வானின்றிச் செய்வினை இல்லை என்றும், இரண்டாவது பிரிவிற் கூறிய முறைமைப்படி நாம் அறிகிறோம். அவ்வாறு உலகத்தைத் தோன்றும்படி செய்த ஆற்றலுடைய ஒருவன்தான் படைப்புக் கடவுள் ஆவான். உலகம் தோன்றின பின் அது நீடித்த காலம் நிலைத்திருத்தலால் அவ்வாறு அது நீடித்திருத்தலைச் செய்கிற ஆற்றலுடைய ஒருவன் இருத்தல் வேண்டும். அவன்தான் காப்புக்கடவுள் ஆவான். அது போலவே உலகம் அழிந்து போதற்கு அந்த அழித்தலைச் செய்யவல்ல ஒருவன் இருத்தல் வேண்டும். அவன்தான்

அழித்தற்கடவுள் (சங்காரக் கடவுள்) ஆவான். ஆகவே உலகம் தோன்றல், நிலைத்தல், அழிதல் என்னும் மூன்று தொழில்கள் உடைமைபற்றிச் செய்வானின்றிச் செய்தொழி லின்மையால் அம்முத்தொழில்களையுஞ் செய்தற்குப் படைப்புக் கடவுள், காப்புக்கடவுள், அழித்தற் கடவுள் என மூன்று கடவுளர் இருத்தல் வேண்டும் என்று கருதல் அளவையாலே நாம் காண்கிறோம். இனி அந்த மூன்று கடவுளரும் ஒருவருக்கொருவர் தொடர்பு உடையவர்களா? அல்லவா? தொடர்புடையவர்களானால் எவ்வாறு தொடர்பு உடையவர்கள்? என்னும் கேள்விகள் அறிவாளொருவன் உள்ளத்தில் உண்டாகும். மூன்று தொழில்களும் உலகமாகிய ஒரு பொருளைப்பற்றி ஒரு குறித்த பயனைத் தரக்கூடியனவாக நிகழ்தலால் ஒன்றுக் கொன்று தொடர்பு உடையவைகளாயிருத்தல் வேண்டும்; ஆதலின் அவைகளைச் செய்கிற மூன்று கடவுளரும் ஒருவருக்கொருவர் தொடர்பு உடையவர்களா யிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

6. எத்தொழிலும் அதனை நிகழ்த்துதலுக்கு முன்னே அதனைச் செய்கின்றவன் அதனை ஒரு குறித்த பயனை அடைதற்காகச் செய்தல் வேண்டும் என்னும வேட்கையையும் (இச்சையையும்) அதனை எவ்வாறு செய்தல் வேண்டும் என்னும் அறிவையும், செய்யுந் திறனாகிய செயலையும் உடையவனா யிருத்தல் வேண்டும். இம் முறைமையின் அன்றி உலகில் எத்தொழிலும் நிகழாது என நாமே நமது பழக்க அறிவிற் காணுகிறோம். எடுத்துக்காட்டாகத் தேர் போன்ற ஒரு செயற்கைப் பொருள் பல வினையாளர்களாற் செய்யப்படினும் அப்பல வினையாளர்களும் ஒரு முதல்வனுடைய வேட்கை அறிவு செயல் முறையிற் செய்யப்பட்டாலொழிய அது குறித்த வடிவத்தில் குறித்த பயனைத் தரும்படியாய்ச் செய்யப்படுதல் முடியாது என நாம் அறிகிறோம். இந்த முதல்வன் பல வினையாளர்களில் ஒருவராயிருக்கலாம். அல்லது அவர்களை ஏவுகிற வேறொருவராயிருக்கலாம். இந்த முறைமைப்படி உலகத்தைப்பற்றி நிகழ்கிற முத்தொழில்களும், அம்முத்தொழில்களையுஞ் செய்கிறவர்களில் ஒரு

வனுடைய வேட்கை அறிவு செயல்களின் வழியே நிகழ்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. படைப்புக்கடவுளும் காப்புக்கடவுளும் அழித்தற் கடவுளை அழித்துத் தங்களிடம் எடுக்கவல்ல ரல்லராயிருத்தலாலும் அழித்தற் கடவுளே மற்றிரு வரையும் அழித்துத் தம்மிடம் எடுக்க வல்லவராயிருத்தலானும் அழித்தற் கடவுளிடமே படைப்புக் கடவுள் (அயன்) காப்புக் கடவுள் (திருமால்) உள்ளிட்ட எல்லா உயிர்ப்பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் சேர்ந்த உலகம் ஒடுங்குகின்றது. உயிர்ப்பொருள்கள் அழிதல் என்பது அவைகள் விளங்கப்பெற்ற உடலுருவங்கள் அழிதலாகும். இவ்வாறு உலகம் அழித்தற் கடவுளிடம் அழிந்து ஒடுங்குகின்றபடியால் ஒரு மரத்தினுடைய சத்திக் கூட்டம் ஒடுங்கியுள்ள சிறு விதையிலிருந்து அம்மரம் மீளவும் தோன்றி உண்டாதல்போல உலகமும் அது ஒடுங்கின அழித்தற் கடவுளிடமிருந்தே முன் ஒடுங்கியவாறே மீளவும் தோன்றுதல் வேண்டும். அழித்தற் கடவுளிடமிருந்து உலகந் தோன்றும் என்பது இதனாற் பெறப்பட்டது. இதனுடன் இரண்டாவது அதிகரணம் முடிந்தது.

திருஞான சம்பந்தர்-செந்தமிழ் நாடகம்

(திருவாளர் S. முத்துக்குமாரசாமியா பிள்ளையவர்கள்)

(உசஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாம் அங்கம்: முதற்காட்சி:

இடம் :—மதுரை.

காலம்:—நள்ளிரவு.

நடர்:—அமண் குருக்கண்மார்.

அமண் குருக்கள் யாவரும் நள்ளிருளில் ஒன்று கூடிக் கொண்டு ஏவல் மந்திரங்கள் செய்தார்கள்.

அமண் குருக்களுள் ஒருவர்:—

நேரமும் விடிவதாயிற்று. நமது மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லையே. ஒன்றும் செய்யாதிருந்து விடுவோமாயின், பின் மிகத் துன்பமாய்விடும். எப்படியும் தீ வைத்தல் வேண்டும். நமது செயல் இப்படி முடியாது போயிற்று என்பது நமது மன்னர் அறியின் நமது மேன்மை தொலைந்துவிடும். நமர் விருத்தியும் குன்றச் செய்து விடுவன், ஆதலால், இனி, இந்த இருட்டோடு இருட்டாய்ச் சென்று தீயை வைத்துவிடவேண்டியது தான். இதுதான் இதற்குத் தீர்வு.

ற்றவர்கள்:—அதுவே சரி: இன்னும் பொறுத்தோமாயின் நேரம் விடிந்து விடும். இன்று இரவெல்லாம் விழித்திருந்தும், நாம் படித்த, கற்ற, மந்திரங்கள் யாவும் பலிக்காது போயிற்றே. இருந்தாலும், இப்போது அதை எண்ணிக்கொண்டிருக்கவேண்டாம். பின் பார்த்துக் கொள்ளுவோம். இப்போது நினைத்தபடி முதலில் செய்து விடுவோம். (அவர்கள் நினைத்தவாறே ஒருபுறம் சென்று தீத்தொழில்புரிந்தார்)

ஐந்தாம்அங்கம்: இரண்டாங்காட்சி:

இடம்:—மதுரை அடியார் வாழ்மடம்:

காலம்:—விடியற் காலம் (பின் இரவு)

நடர்:—சிவனடியார்கள், திருஞான சம்பந்தர்:

சிவனடியார்கள்:—தீத்தொழில் வெளிப்படுதலும், அடியார்கள் வருந்தி, பிரிந்து வெளியில் வந்து—திருஞான சம்பந்தர் முன் அணுகி வணங்கி:—

அஞ்சினர் பதைப்பு நீக்கும் ஆரருள் வள்ளலே,

நாங்கள் வாழ் மடத்துத் தீயமணர் தீ மூட்டினர், வெளியில் வருவதற்குமுன் தீ சூழ்ந்து கொண்டது. பிரித்து வருவதற்குள் அரும்பாடு பட்டனம். காத்தருள் எங்களை ஐய!

திருஞான சம்பந்தர்:— (தானே எண்ணிப் பரிவுறுதல்).

ஆ! மாதவர் துயிலும் இத்திரு மடத்துப் பழுது செய்வ

தே ! பாவிகள் எனக்குத் துன்பிழைக்கக் கருதி, இது செய்தார்கள். ஆயின், இறையோன் அன்பருக்கு எய்துமோ? (அச்சக் குறி - பின் வெகுண்டு)

இதுதான் அமணர்கள் அறச்செயலோ! நன்று! இது, இவர்களை யாதும் எண்ணுவது தவறு. மன்னன் முறை வழுவாயிற்று. எய்தாரை நோவாது அம்பை நோவது எவன்? மன்னன் வலியின்றி இம் மறச்செயல் செய்ய ஒருப்படுவரோ? ஆதலால், இக்குற்றம் மன்னன் பாலதே. அன்னவன் பாலே ஏகுதற் செய்கின்றேன். சைவவாழ் மடத்து அமணர்களிட்ட தீத்தழல் போய்ப் "பையவே சென்று பாண்டியற்கு ஆக"

திருச்சிற்றம்பலம்.

"செய்யனே திரு வாலவாய் மேவிய
வையனே யஞ்ச லென்றருள் செய் யெனைப்
பொய்யரா மமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே."

"அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம்பந்த னுரை பத்துஞ்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே."

திருச்சிற்றம்பலம்

உடனே தீ நின்று விட்டது. அடியார்கள் யாவரும் மன முவந்து வழுத்தித் தங்கள் இருப்பிடஞ் சென்றனர்.

ஐந்தாமங்கம்: மூன்றாங்காட்சி:

இடம்:—மதுரைத் திருமடம்:
காலம்:—விடியற் காலம்:
நடர்:—அடியார்கள்.

சிவனடியார்களுள் ஒருவர்:— (மற்று முள்ளவர்களைப்பார்த்து) அடிகளே,

இன்று நிகழ்ந்த சிவத்தோற்றத்தைப் பார்த்தீர்களா? நம்து பிள்ளையார் ஞானவடி வென்பதில் யாதேனும் ஐயமுண்டா?

நள்ளிரவில்: நண்ணூர் நடுவில்! நாடாத பெருந்துன்பம் உற்ற போது; மனஞ்சிறிதுங் கலங்கினரா. எவ்வளவு வீரம்? பெருந் தன்மை?

சிவனடியார்களுள் ஒருவர்:—

பகைவராக இருந்தும் அவர்கள் மீது எவ்வளவு உருக்கங் காட்டுகின்றார்? அவர்கள் அறிவின்மைக்கு எவ்வளவு இரங்கு கின்றார்? எவ்வளவு அருள்? "இவ்வறிவிலிகள் என் செய்வார் கள்?" மன்னன் தானே இத்தீங்கு நிகழ்வதற்குக் காரணம், என்று-தீயை அவன் பால் ஏவினரே.

மற்றொருவர்:—

அடிகளே, அதுமட்டுமா? நமது பிள்ளையார் செயல் யாவும் அருள் வழிப்பட்ட தென்பது வெள்ளிடை. மன்னன்பால் தீயை ஏவும்போதும் "பையவே" என்று ஏவினர் பார்த்தீரா. அதிலும் எவ்வளவு அன்பு பார்த்தீரா?

மற்றொரு அடியார்:—

முற்றத்துறந்த முனிவரே யாயினும், வெகுளி வந்துற்ற தானல், ஏதேதோ புகன்றிடுவர். இது பற்றியன்றோ "குன் றேறி நின்றார் வெகுளி" என்று சிறப்பித்து "தேவருங்" கூறி யிருக்கின்றனர். நமது பெருமானார் பிள்ளைமைப்பருவமாக விருந்தும், எழுந்த வெகுளியை யடக்கி, எவ்வளவு சாந்தமாய்ப் போக்கிட்டார் பார்த்தீர்களா? "பையவே" என்ற ஒரு சொல், சொல்லாதிருந்திருப்பாராயின், மன்னன் உடனே கரிந்து போயிருக்க மாட்டானா? அப்படி நேரின், நமது பிள்ளையாரை யடுத்த அம்மையார் மங்கலம் என்னும்? குலச்சிறையார், நமது வள்ளல் கழல் வணங்கும் போதே, வேண்டிய வரம் என்னும்? நமது அம்மையார், பின், கோவிலில் வைத்துத்திருவடி வணங்கி எழும்போது "அம்மையார், கேட்ட வேண்டுகோள் நினைப் பிருக்கிறதா? "யானும் என்பதியும் செய்த தவமென் கொல்" என்று சொன்னரல்லவா? அவர் சொன்ன கருத்துத் தானெ ன்னை? நமது பிள்ளையார் திருக்கரத்தால் நீறு சாத்தும் பெருமை, மன்னவரும் பெற வேண்டுமென்பதல்லவா?

மற்றொரு அடியார்:—இக்கருத்துப் பற்றியன்றோ நமது சேக்கிழார் பெருமான்,

திருச்சிற்றம்பலம்.

“ பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னாலும்
அரசன்பா லபராதமுறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடைய ரதலா லுந்
தீப்பிணியைப் பையவே செல்க வென்றார்”

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாமங்கம் : நான்காங் காட்சி.

இடம்:—அரசன் அரண்மனை.
காலம்:—விடியற்காலம்.
நடர்:—மங்கையர்க்கரசியார், தோழிமார்கள், குலச்சிறையார் முதலியோர்.

காலைப்பொழுதில் மங்கையர்க்கரசியாரைப் பார்த்து வணங்க அமைச்சர் வந்தனர். இருவரும் இருக்கும்போது, ஒருவர் ஓடிவந்து

“எங்கள் தவ உருவே,

நேற்றிரவு, நமது சைவ மறையவர் வாழ் மடத்தில், பாதகர் தீயிட்டனர்” (என்று பதைத்துக் கூறினார்)

மங்கையர்க்கரசியார்.—(ஏக்கமுற்று)

அமைச்சரே,

இத்தீயவர் நாட்டு, நாம் தானே, வரவழைத்தோம். நாம் இனிச் செய்வது என் ? மாய்வதே உய்தி? (என்று வருந்தல்) அடியவர்கள் என்ன பாடு படுகின்றனரோ ? நினைக்க நினைக்க என்னால் துன்பம் தாங்க முடியவில்லையே ?

அமைச்சர்:—அம்மையே,

என் மனமும் உடைகின்றது. எதுவுந் தீரத் தெரிந்தே செய்யவேண்டும். இன்னும் சிறுபொழுதில் தெரிந்து, பின் எண்ணுவோம். சிறிது தாழ்க்க.

தோழி:—(இவ்வமயம் ஒரு தூதுவர் ஓடி வந்து கூறக்கேட்டு, அம்மை முன் சென்று வணங்கி) உய்ந்தனர் அடியார்கள். மறையவர்க்குத் தீங்கு சிறிதுமில்லை. தீ வைத்தது உண்மைதான். அடியார்கள் பிள்ளையாரிடத்துச் சென்று முறையிட்டார்களாம். உடனே, அவர் ஒரு பாசுரம் அருளினராம்.

தோழி:—உடனே, அப்பற்றிய தீ நின்று விட்டதாம். அடியார்களெல்லாம் மிக நலமாய், பிள்ளையார் பெருமையை வியந்துகொண் டிருக்கிறார்களாம். ஊரிலும் கூட்டம் கூட்டமாய்க் கூடி, இந்த வியப்பான செய்தியைத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்களாம். இதோ, நமது தாதி வந்து கூறினள்.

மங்கையர்க் கரசியார்:—

தோழி :—அங்கயற் கண்ணி யருள்பெருகுக,

அமைச்சரே, தீதின்மை தெளிந்தோம். பெருமான் அருளே!

அமைச்சர்:—அம்மையே,

கருமுருட்டமண் கையர் செய்த, இந்தத் தீங்கு முடிவில் என்னவாய் முடியுமோ? (வருந்தினார்).

காவலர்:—(ஓடி வந்து அம்மை முன்னின்று வணங்கி) எங்கள் பெருமாட்டி,

இதோ, நம் மன்னருக்கு வெப்பு நோயுற்றது. கொடுமை தாங்கொணாது வருந்துகின்றார். படுக்கையில் உருளுகின்றார். புரளுகின்றார். பக்கத்து யாரும் நெருங்க முடியவில்லை. மாளிகைப் புறத்தும் அனல் வீசுகின்றது. வெளியில் நின்றார்களும் புலர்ந்து, தீந்துபோம்படி, உடலிலிருந்து வெப்பம் எழுகின்றது.

அம்மையாரும், அமைச்சரும், கேட்டு முடிவதன்முன் விரைவாய் மன்னன் மருங்கு பதைப்புடன் உற்றார்கள்.

மங்கையர்க்கரசியார்:—

அமைச்சரே, நாமும் பக்கத்து நெருங்க முடியவில்லையே. நமது மன்னர் எவ்வாறு தாங்குவர்? சிவனே! என் செய்வது இதுபோது. மருத்துவர் வரும்வரை பொறுக்காது போலுமே. இளங் கதலிக்குருத்தும், தளிரும் கொண்டுவரச் செய்க. அவற்றையாவது இடுவோம்.

(ஏவலாளர்கள் உடனே கொண்டுவந்து மன்னன் பக்கத்து இடல்) அவையும் துண்டுகளாகப் போதல் கண்டு)

ஐயகோ, இத்தண்டும், தளிரும் துகளாகின்றதே! என்செய்வேன்! ஈசா!

என்னுறு காதலர் படுந்துன்பம் பார்க்க என்மனம் தாங்குகின்ற தில்லையே!

இறைவா! ஓலம்! அருள்செய்! காத்தருள்.

மருத்து நூலார்:—இதோ இப்பிணியைக் கைநொடிப் பொழுதில் ஓட்டி விடுகின்றோம் - ஒருவரும் வருந்த வேண்டாம்.

(ஒன்றும் பலிக்கவில்லை - மருந்து போடப்போட மிக்குற்றது நோய். அரசன் கருத்தழிந்து உரை மறந்தனன்)

ஐந்தாம் அங்கம் - ஐந்தாம் காட்சி.

இடம்:—சமண்பாழி.

காலம்:—விடியற் காலம்.

நடர்:—அமண் குருக்கண்மார்கள்.

அமண் குருக்களுள் ஒருவர்:—மற்றவரை நோக்கி.

அடிகண்மீர், புகுந்தது கேட்டீரோ. நமது மன்னனுக்கு வெப்பு நோய் அடுத்ததாம். யாவரும் கிட்டத்து நெருங்கா வகை அனல் வீசுகின்றதாம். எல்லாரும் கூடி வேண்டுவன செய்து கொண்டிருக்கிறார்களாம். இருந்தும், அரசன், தன்னறிவு இழந்து, பேசவுங் கூட முடியாது கிடக்கின்றாராம்.

மற்றவர்:—அப்படியா! உண்மைதானு!

இன்னெருவர்:—உண்மைதான. நானும் இதோ கேள்வியுற்றேன்.

மற்றேருவர்:—உண்மைதான். நாம் இங்கிருப்பது முறையில்லை. எழுந்திருங்கள் எல்லாரும் உடனே போவோம். அங்கு நாமும் போயிருந்து கொண்டு நமது மந்திரங்களைப் போட்டுப் பார்ப்போம். இந்தச் சிறுவன் வேலையாகத்தான் இருக்கும்.

"பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்"

என்பது சரியாக ஆயிற்று. நமது செயலாகத்தானிருக்கும் நமது குட்டு வெளிப்படும் முன் போய்ப் பக்கத்து இருந்து கொள்ளுவோம். நாம் உடன் இருந்தால், நம்மைப் பற்றி, அரசன் ஐயுறுதல் படும்படி, ஒன்றும் ஒருவரும் சொல்ல முடியாது. எழுந்திருங்கள், போவோம் விரைவில்.

(யாவருங் கூடி வந்து மன்னன் மருங்கணைந்தனர்).

அடிகண்மார்:—அடடா! என்ன வெப்பம். இது, சூட்டின் மிகுதியால் உற்றது. நமது கைகளிலுள்ள மயிற்பீலி கொடு தடவுவோம். (என்று எடுத்தனர் பீலிகையினை.) ஐயையோ! நமது பீலிகை கரிந்து போகின்றதே! கைப்பிடிப்பிரம்பும் கரிந்து போயிற்றே. பொரி பறக்கின்றதே! சுடுகின்ற உடலில் இந்தப் பொரியும் விழுகின்றதே - (என் செய்வது என்று ஏங்கி நின்றனர்).

அடிகண்மாருள் ஒருவர்:—

நாம் பக்கத்து நிற்கமுடியவில்லை. சற்று விலகி நின்று கொண்டு நமது கையிலுள்ள "குண்டிகை" நீரை மந்திரங்கூறித் தெளிப்போம்.

(அவ்வாறு "அருகனே காவாய், அருகனே காவாய்"

என்று தெளித்தனர்) ஐயையோ! என்ன செய்வது, தீயிடையிட்ட நெய் போலன்றோ நமது குண்டிகை நீர் ஆகின்றது. இனி என் செய்வது.

மன்னவர்:— (அமண் குருக்கண்மார்களை நோக்கி,)

உங்களைக் கண்டதும் நோய் வெப்பம் மிகுதியாகின்றது. அதிலும், உங்கள் நீர் பட்டதும் துன்பம் தாங்கமுடியவில்லை. ஒருவரும் என் கண்முன் நில்லாது போங்கள். போதும் உங்கள் உறவு. ஐயோ! என்செய்வேன். வெப்பம் தாங்க முடியவில்லையே (என்று சோர்ந்து கிடந்தான்).

மங்கையர்க்கரசியார் :—(பயமெய்தி அமைச்சரை நோக்கி) அமைச்சரே,

புகலியிலிருந்து வந்து நம்மை ஆண்டு கொண்டவர் பால் இவர்கள் செய்த தீங்கு தான் இவ்வாறு மூண்டதோ ?

அமைச்சர் :—முப்புர மெரித்தார் தம்மடியவர்க்கு இவர்கள் செய்த தீங்கு தான் இவ்வாறு உற்றது. இவர்கள் இன்னும் மருந்து போட உன்னின் நோய் மிகுமே யன்றிக் குறையாது.

பிழையும் திருத்தமும்

	பிழை	திருத்தம்
சிலம்பு ௮ பக்கம் உ௱௩ வரி கஅ	அதிகாரம்	அதிகரணம்

" பக்கம் ௧௬௪ல் "எங்குந்தான் வியாபியாய்" என்ற சித்தியார்ப் பாட்டுக்குப்பதில் அடியிற்கண்ட சித்தியார்ப் பாட்டைப் பெய்து வாசிக்க.

"எங்குந்தா னிறைந்துசிவ னின்றா னாகி
 யெல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னி
லிங்குந்தா னந்தகருக் கிரவியிரு ளாகு
 மீசனருட் கண்ணில்லார்க் கொளியாயே யிருளாம்
பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
 பரிதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளி னாலே
 சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே."

சூத். ௧௧; அதி. உ.